பிரஜாநுகூலன்.

அநுபவவிஷயங்களடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

வருஷம் 14.	திரிச்சிராப்பள்ளி : நவம்பர் மீ —1917.	மாதம் 1.

சென்றுபோன நாட்கள்.

சென்றனவும், இனித் திரும்பாதனவுமான தினங்களைக் குறித்து நாம் வாயூறுவதில் ஆம் பயனென்ன? எவ்வளவோ ஸந்தோஷத்துடனும் போக்கிய நாட்கள், புளகித மனத்தினராய் நேசமாணிக்கங்களுடன் அன்பு குலாவிய நேரங்கள், உடற்பிறப்புடன் உளமகிழ்ந்து நின்ற காலங்கள், எத்துணையோ ஆவலுடனும் நாம் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்ட மதுரமான ஸந்தர்ப்பங்கள், நோன்பு - பண்டிகை - விரதாதிகளை வெகு உற்சாகமாகக் கொண்டாடிய அந்த ஆனந்தபரவசம், அவ்வினிய ஸல்லாபம், குதூகலம் - என்னவோ அதுவும் ஒரு காலம்!

சென்றன செல்க; வீணே அதனை நினைந்து நினைந்து என் சிந்தை நோக? கடவுள் காட்டிய வழியில், விதிப்பயன் போன பாதையில் நம் வாழுநாள் போய்க்கொண்டிருக்கின்றது. அனைத்தும் அவன் இன்னருள் போலாகுக. நமது சிந்தாரத்தினங்கட்கும் பத்திரிகாபிமானிகட்கும் மங்களம் வழங்குகின்றோம். "பிரஜாநுகூலன்" தோன்றி பதின்மூன்று ஆண்டுகளாயின. இப்பொழுது பதினான்காவது வருஷம் துவக்கமாகின்றது. லோக ரகசியங்களையும், பிரபஞ்ச அநுபவங்களையும் இயன்றவரை விவரித்து வாழ்க்கைக்கு ஒரு முன்எச்சரிப்பு - ஒரு உல்லாஸம் - ஒரு பூரிப்பு உணர்த்துதலே அதன் நோக்கம்.

இதுகாறும் வெளிவந்துள்ள "பிரேமநாதன்" என்ற நாவலின் முழு விவரத்தையும் சாரசங்கிரகமாகச் சுருக்கி இந்த ஸஞ்சிகையில் பிரசுரித்திருக்கிறோம். அடுத்த பத்திரிகையிலிருந்து தொடர்ந்து வெளியாகி பூரணம்பெறும். காகிதக்கஷ்டம் கண்ணைப் பிடுங்குகின்றது. விலை ஒன்றுக்கு ஒன்பதாய் ஏறியிருப்பதில் - நமது பத்திரிகையின் சந்தாவை வருஷம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டாக வைத்திருக்கின்றோம். பிரதிமாதமும் முதல் வாரத்தில் வெளியாகிவரும்.

அன்பர்கள் பத்திரிகா நிர்வாக கஷ்டத்தை நன்குணரவேண்டுகின்றோம். பத்திராதிபருக்கு ஏற்படும் செலவுகள் எண்ணில—கணக்கிலடங்காதன. அவற்றை நினைப்பினுங்கூட நெஞ்சு திடுக்கிடுகின்றது! இவ்வளவும் பத்திராதிபர் சகித்து ஏற்றுச்சென்றால்தான், பத்திரிகா பிரசுரமும் கிரமமாக நடந்தேறும். ஒரு ரூபாய் மாற்றினால் ஒரு நிமிஷத்தில் பறக்கும் இந்நாளில் நாம் அதிகப்படுத்தியுள்ள சந்தாவெல்லாம் அணா பதினொன்று மட்டுமே. அன்பர்கள் நமது நெடுநாள் முயற்சியில் அபிமானம் வைத்து

"பிரஜாநுகூலனை" எப்போதும்போல் ஆதரித்து நம்மைத் தைரியப் படுத்துமாறு பிரார்த்திக்கின்றோம். அன்பர்களின் கருணைக்கு நம்மை ஒப்புக்கொடுக்கின்றோம். நமது அன்பார்ந்த "திராவிடாபிமானி" சந்தா தார்களான நேயர்களும், தங்களைப் பத்துவருஷகாலமாக நேசித்த நம் மிடத்தில் தங்களின் அபிமானத்தைப் பூரணமாகச் செலுத்துவார்க ளென்று நம்பியிருக்கிறோம். இப்பத்திரிகையின் பதின்மூன்று வருடங் களும் சென்றுபோன நாட்கள்தாம்! இனி தொடங்குவன—நிகழும் நாட் கள்! ஸர்வலோக சரண்யராகிய ஜெகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப் பாராக. சுபம்.—

பத்திராதிபர்.

"திராவிடாபிமானி" யின் யதார்த்த சரித்திரம்.

காலஞ்சென்ற உத்தமபுருஷரான மிஸ்டர் டி. ஏ. ஜான்நாடார் 1905-ம் வருஷத்தில் சேலம் "தக்ஷணதீபம்" ஆபீஸில் அஸிஸ்டெண்டாக இருந்துவந்தார். ஏற்கெனவே அவருக்கும் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு வுக்கும் சந்திப்பு ஆகியிருந்தது. இருவருக்கும் நேசக்கடிதங்கள் பெருகி வந்தன. பின்னர் 1907-ம் வருஷம் ஜனவரிமாதத்தில் வேறு பத்திரிகை யைப் பிரசுரிக்க யோசனையுண்டானது. என்ன பெயரிடலாமென்றும், உங்களுடைய உதவி முற்றிலும் வந்தாலன்றி முடியாதென்றும் ஜான் நாடார் நாயுடுவுக்கு எழுதினர். "திராவிடாபிமானி" என்ற பெயரை வைக்கும்படி தெரிவித்து, அதன் ஆரம்பமுதல் தாம் திருச்சியிலிருந்தே வேலைசெய்வதாகவும் நாயுடு பிரதியுத்தரம் தந்தார். ஜூன்மாதத்தில் "திராவிடாபிமானி" சேலத்திலிருந்தும் வெளியாயிற்று. முதற் பத்திரிகை யில் கிரமப்படி நாயுடுவும் நாடாரும் காணப்பட்டனர். வருஷா வருஷம் ஒரு புஸ்தகம் பரிசு தரவும் நாயுடு ஏற்பாடுசெய்து அவ்வருஷத்திற்குத் தமது "பரிமளா" என்ற நாவல் ஒன்றினை சந்தாதாரர்களுக்கு ஸன்மானித்தார். பத்திரிகை அப்பொழுது 4-பக்கமும், 2-பக்கம் அநுபந்தமும் உள்ளதாய்ப் பிரகடனமாகி வந் தது. 'பாலபாஸ்கரன்' என்றும், 'பிரஜாநுகூலன் பத்திராதிபர்' என் றும், இராமாநுஜலு என்றும்; அந்தரங்கமாய் பத்திராதிப வகையிலும் பத்திராதிபர்-கலம் முதலியவற்றையும் வரைந்து அவ்வாறாகப் பத்திரிகை யின் முக்கால்பாகத்துச் சங்கதிகளையும் திருச்சியிலிருந்தே எழுதியனுப்பி வந்தார்.

பிறகு நாயுடு பத்திரிகையை விருத்திசெய்தார். அநேகரைச் சேர்த்தார். "பத்திராதிபர் குறிப்பு" என முதன்முதலாக ஒன்றைத் திறந்தார். பிறகு வாரத்திரட்டு, பழமொழிக் குறிப்பு, துண்டுதுணுக்கு, நமதுகடை என்றபல வகுப்புகளையெல்லாம் உண்டுபடுத்தி அதற்கேற்ற படி விஷயங்கள் எழுதுவதானர். பெண்கள் பக்கம் என்பதையும் ஏற் பாடுசெய்தார். ஒவ்வொரு தலைப்பிற்கும் ஒவ்வொரு பிளாக்குகளை அமைத்

தார். 6-பக்க பத்திரிகையை 8-பக்கமாக்கினர். பிறகு 8-பக்கத்தை 10-பக்கமாக்க வழிதேடினர். அதை இன்னும் 12-பக்கமாக்க யோசித்திருந்தபோது ஐரோப்பிய யுத்தமும் காகிதப்பஞ்சமும் குறுக்கிட்டுக்கொண்டது. இதனிடையே நாயுடு திருச்சியிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். ஸ்ரீரங்கத்திலிருந்தே சகலமும் எழுதிவந்தார். ஜான்நாடார் இதைப் பிரதிவாரமும் எதிர்பார்ப்பார். நாயுடு வகித்திருந்த பத்திராதிபத்யத்தின்

ஒரு வாரத்து வேலையின் விவரம்

எங்ஙனமெனில், பிரதிவாரத்திலும் வெள்ளிக்கிழமையிலிருந்து நாயுடு தமது பத்திராதிபத்ய வேலையை ஆரம்பிப்பார். முதன்முதலாக துண்டு துணுக்கு, பொதுவியாசம் இவைகளை வெள்ளியன்று அனுப்பிவிடுவார். சனிக்கிழமை "பிரஜாநுகூலன்" பத்திரிகைக்கு வேண்டிய வேலைகளைக் கவனிப்பார். ஞாயிறன்று பழமொழிக்குறிப்பு, வாரத்திரட்டு, வர்த்தமானம் இவைகளை அனுப்புவார். திங்களன்று பத்திராதிபர் குறிப்பு முதலியன தருவார். செவ்வாயன்று ஸப்லீடர்கள் எழுதியனுப்புவார். புதன்கிழமை பத்திராதிபர் கலம் எழுதி முடித்து அனுப்புவார். வியாழனன்று பிந்திய சமாசாரமும், முக்கியமான செய்திகளையும் அனுப்புவார். ஒவ்வொரு தபாலுக்கும் வர்த்தமானங்களும் அனுப்பியபடியே இருப்பார். "சேலம் சங்கதிகள்" என்பதை மட்டும் நாடார் தயார்செய்துவிடுவார். வெள்ளிக்கிழமை பத்திரிகை வெளியாகிவிடும். இந்த விதமாக பத்திராதிபத்தியத்தை நாயுடுவும், நிர்வாகத்தை ஜான்நாடாரும் வகித்துவந்தார்கள். வெளிவராது மறைந்து நின்ற இந்த உண்மையை நிரூபிக்க இன்றைக்கும் மிஸ்டர் ஜான்நாடாரவர்களின் கைப்பட எழுதிய கடிதங்கள் நமது நண்பர்களின் பார்வைக்குத் தயாராயிருக்கின்றன. மகாவிகடதூதன், விஜய விகடன், இந்துநேசன், சுதேசபரிபாலினி, கிருஷிகன், ஆனந்தபோதினி, முதலிய பல பத்திராதிபர்கட்கும் இது தெரிந்த ரகசியமே. நிற்க,

ஜான்நாடார் கடவுள் பதமடைந்த பிறகு

அவரது தர்மபத்தினி நாயுடுவுக்கு தந்திகொடுத்து சேலத்திற்குத் தருவித்து, பத்திரிகையை முற்றிலும் அவர் வசம் ஒப்புவித்துவிட்டு, பத்திரிகையை ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டுபோகும்படி எழுதிக்கொடுத்தும், அவரை நம்பச்செய்து, ஐந்துமாதகாலம்போல் பத்திரிகையை அவர் நடத்திவருமாறுபுரிந்து, அவர் மூலமாக பத்திரிகா விஷயங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டார். பிறகு அவர் ஸ்ரீரங்கத்திற்குப்போன சமயம்பார்த்து அவரை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டனர். நாயுடு ஏதோ சிலகாலம் உபபத்திராதிபர்போல் இருந்து வந்ததாகவும், ஜான் நாடாருக்குப் பிறகு (?) சில மாதம் பத்திராதிபராக இருந்ததாகவும், ஸ்ரீரங்கத்திலிருந்து அவர் எழுதியனுப்புவதில் பத்திரிகை காலதாமதமாய் வெளியாவதால்—அதற்காக அவரை நீக்கிவிட்டதாயும் திராவிடாபிமானிப் பத்திரிகையில் ஒரு அறிக்

கை வெளிப்படலானது. சந்தாதாரர்களும் அந்தப் பொய்யை உண்மை யென்று கருதுவதாயினர். சேலத்திலிருந்தே பத்திரிகையை நாயுடு நடத்தி யிருக்க, அந்த உண்மை மூடப்பட்டுப் போய்விட்டது.

சோர்னம்மாள்ஜானுக்கு பத்திரிகைக்கு வியாசம் எழுதும் ஸக்தியோ, அநுபவமோ, அதற்கேற்ற படிப்போ சற்றும் இல்லை. "சுதேசமித்திரன்" பத்திரிகையி லிருப்பதையெல்லாம் "திராவிடாபிமானி"யில் போட்டு பத்திரிகையை நடத்திவிடுகிறதென்று முடிவுகட்டிவிட்டனர்.

இரவுபகலாய் பத்து வருஷ காலமாகப் பாடுபட்டுழைத்த
இராமாநுஜலு நாயுடுவுக்கு
இந்த நாமக்கட்டியும் துல்லாவும்தானா பரிசு?

பத்திரிகையின் அபிவிருத்தியையும் பொதுநலத்தையும் கருதி காலமெல்லாம் இரவு பகல் கண்விழித்து எழுதி எழுதி உழைத்த உழைப்புக்குப் பலன் இதுவாகில் பத்திராதிபரின் மனம் எவ்வாறாகும்? இதுதான் ஜான் நாடாருக்கு ஸ்தாபிக்கப்படுகிற ஞாபகச் சின்னம்போலும்? காலஞ்சென்ற அந்த சிநேக சிரேஷ்டருக்கு—தமது ஜீவாதாரமாய் நாயுடுவை நம்பி யிருந்த அந்த உத்தமருக்கு—இது எம்மட்டில் ஆத்ம திருப்தியாகுமோ அறியோம்!

கடவுளுக்கே அற்புதம்!

பத்திராதிபரின் வேலை எவ்வளவோ கண்ராவியானது! மூளை யுருக யுருக யோசித்து எழுதும் அவர் பிழைப்பு—பாடு—தொழில் வெகு பரிதாபகரமானது. ஒரு விஷயத்தை மனதிலிருந்தும் காகிதத்தில் கக்குவதற்கு சில சமயங்களில் முடியாமல், பலமுறை எழுதி, மறுபடியும் அது சரியில்லை யென்று கிழித்துவிட்டு, வேறொன்றை எழுத் முயல்வதில் அவர் படும் அந்தக் கஷ்டம் கடவுளுக்கே தெரியும். இப்படி ஒரு வருஷம் இரண்டு வருஷமல்ல—பத்து வருஷங்களின் உழைப்பு!—அதற்குப் பிரதிபலன் இதுவேயோ?

திராவிடாபிமானியும் இராமாநுஜலு நாயுடுவும்.

ஒரு உண்மையான விஷயம்.

திராவிடாபிமானியின் சந்தாதாரர்களாகிய நேயர்களனைவருக்கும் அப்பத்திரிகையின் பத்திராதிபாக யிருந்த நாம்,—திடீரென்று ஏமாற்ற மடைந்த நாம்,—மிகுந்த வியஸனத்தோடும் பிரிவாற்றாமையுடனும் தெரிவித்துக்கொள்ளும் விக்ஞாபனம்.

எமது இன்னுயிர்த்துணைவரும் தோழருமான மிஸ்டர் டி. எ. ஜான் நாடாரவர்கள் திடீரென்று மார்படைத்து 22-12-1916-ல் காலஞ்சென்று விட்டதும், அதன் பின்னர் பகிரங்கமாய் நாம் பத்திராதிபத்தியம் வகித்து, 'திராவிடாபிமானி'யை மிஸ்டர் நாடார் காலத்தில் நடைபெற்றதுபோலவே அதன் நடை, தொனி, முதலியவற்றில்,—பத்திரிகை ஆரம்பமுதல் நாமே

உண்மைப் பத்திராதிபராய் இருந்து வந்தமையின்,— எவ்வித மாறுதலு மின்றி, பின்னும் சிறப்பாகவே நடத்திவந்ததும் நம் நேசரத்தினங்கள் அனை வருக்கும் தெரிந்தவிஷயமே.

நமது பத்திராதிபத்யத்தை ஆதரித்து அநேக கடிதங்கள் வர அவற்றில் ஒரு சில, இடமுள்ளவரை 'திராவிடாபிமானி'யில் அவ்வப் போது பிரசுரிக்கப்பட்டிருமுள்ளன. நாம் யதார்த்தமான மனதுடனும், உள்ளத்திலிருந்தெழுந்த உறுதியான விஸ்வாசத்துடனும் நமது கடமை யைச் சேலத்திலிருந்தே செய்துவந்திருக்கிறோம். ஒரு தினத்திற்குள்ள 24 - மணி நேரத்தில், 21 - மணி நேரத்தையும் திராவிடாபிமானிக்காகவே செலவிட்டு உழைத்து வந்ததையும் 23-2-17 - உள்ள "திராவிடாபிமானி"ப் பத்திரிகையின் 5 - வது பக்கம் முதற்கலத்தில் குறிப்பிட்டுமிருக்கிறோம். மிஸ்டர் ஜான்நாடார் தமக்குமட்டும் தெரியும்படியான குறிப்புகளாகக் கணக்குகளை வைத்திருந்தார். விவரமான கணக்குகள் ஏதும் இராததால், சொர்னம்மாள் ஜானே இதைப்பற்றி சேலம் ஸப்மாஜிஸ்திரேட் ஆபீஸில் எழுதிப் பதிவுசெய்துவைக்கவும் நேர்ந்தது. இந்த நிலைமையில் குறிப்பு களைச் சோதித்து ஒழுங்குபடுத்தவும், சந்தாதார்களுக்கு வி. பி. அனுப்பவும்

நாம் பட்ட பாடு

கடவுளே அறிவார். ஆபீஸிலோ கம்பாஸிடர்கள் (அச்சுக்கோர்ப்போர்) பலரும் நின்றுபோயினர். குமாஸ்தா முதலிய நியமனங்கள் ஆபீஸில் ஒன் றும் கிடையா. எனவே துணைக்கு ஒருவித உதவியுமின்றி, எல்லாவற்றிற் கும் நாம் ஒருவரே இருந்து சகல வேலைகளையும் செய்துகொண்டு ஈடு கொடுக்கவேண்டியதாயிற்று. கம்பாஸிடர்கள் இன்மையால் இரவிலும் வேலைவைத்துப் பத்திரிகையை வெளியாக்கநேர்ந்தது. இந்த நிலைமையில் பத்திரிகை கிரமமாகக் காலத்தில் வெளியேறுவது எவ்விதமென்பதை நமது நண்பர்களே ஆலோசித்துப் பார்க்கும்படி கோருகிறோம்.

உண்மை இவ்விதம் இருக்க

நாம் (ஜான்நாடார் காலத்தில் செய்துவந்ததுபோலத்) திருச்சினுப்பள்ளியி லிருந்தபடியே திராவிடாபிமானியை நடத்திவந்ததுபோலவும், அதனுல் தான் பத்திரிகை காலதாமதமாய் அடிக்கடி வெளியாக நேர்ந்ததுபோல வும்—அந்த ஒரு காலதாமதக் குற்றத்திற்காக எம்மைப் பத்திராதிபர் ஸ்தா னத்திலிருந்து நீக்கிவிட்டதாகவும் 1 - 6 - 17-ம் தேதியுள்ள திராவிடாபி மானியில் சொர்னம்மாள்ஜான் வெளியிட்டுள்ளார். இது அவ்வளவும் பொய்! வடிகட்டின பொய்!! நாம் சேலத்திலிருந்தே ஒவ்வொரு பத்திரி கையையும் வெளியிட்டு வந்துள்ள விஷயம்,—சந்தாதார்களுக்கு நாம் சேலத்திலிருந்து எழுதிய கடிதங்களாலும், சேலம் தபாலாபீஸ் கணக்கு களாலும்,—நன்கு விளங்கும். நமது விஷயத்தில் ஆதிமுதற்கொண்டு சொர்னம்மாள்ஜான் கபடமாகவே பலவித யோசனை

களுடனும் இருந்து வந்திருப்பதாக இப்பொழுது ஸ்பஷ்டமாகத் தெரி கிறது. 26 - 12 - 16-ல் நம்மிடம் 'திராவிடாபிமானி'யை ஒப்புவித்து

விட்டதாக அவர் பத்திரிகையின் மூலம் அறிவித்ததும் தவிர, அதற்கு மறுதினம், என்றைக்கும் நாமே இருந்து நடத்திக்கொள்ளுமாறு வர்த்தமானம் முதலிய எழுத்துமூலமான ஆதரவுகள் நமக்கு எழுதிக்கொடுத்தும், டிக்ளரேஷன் கொடுத்தசமயத்தில் "S. G. R. நாயுடுவே பத்திராதிபர்"-என்று எழுதிவைத்தும், சென்னை போலீஸ் கமிஷனர் "திராவிடாபிமானி"க்குப் பத்திராதிபர் யாரென்று விசாரித்துத் தெரிவிக்கும்படி சேலம் போலீஸ் ஸ்டேஷன் மூலமாய் வந்த கடிதத்திற்கு எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு திராவிடாபிமானியின் பத்திராதிபர்—என்று சொர்னம்மாள்ஜான் எழுதிக்கொடுத்தும் இன்னும் பலவிதமாக நம்மை நம்பவும் செய்தார். வெளுத்ததெல்லாம் பாலென்று நாம் நம்பி நடந்துவந்தோம்.

ஏப்பிரல் மாதம் 20-ம் தேதி பத்திரிகையைப் பிரசுரம் செய்துவிட்டு, நமது அசௌக்கியம் காரணமாக அன்றிரவு திருச்சினாப்பள்ளிக்குப் பிரயாணமானோம். திருச்சி வந்ததும் வீட்டில் பிரசவம் முதலிய அசந்தர்ப்பங்கள் நேரிட, அதனால் அந்த வாரம் நாம் சேலத்திற்குப் போகக்கூடவில்லை. இதன் மத்தியில் நமது குமாரத்தியும் காலஞ்சென்றனளாக, இவ்விதமான நெருக்கடியான சந்தர்ப்பம் நேர்ந்து நாம் தத்தளிக்க, அதற்கு சொர்னம்மாள்ஜான் சற்றும் அனுதாபப்படாமல், அதையே தமக்கு நல்ல தருணமாகக்கொண்டு, நம்மை ஜான் நாடார்காலத்தி லிருந்ததுபோல் உபபத்திராதிபராயிருந்து பத்திராதிபர்கலம் முதலிய சகலமும் எழுதியனுப்பிக்கொண்டு திருச்சினாப்பள்ளியிலேயே இருக்கும்படியும், நாம் சேலத்திற்கு வரவேண்டியதில்லையென்றும் திருச்சியிலிருந்தே முன்போல் சங்கதிகள் அனைத்தும் அனுப்பும்படியும், வெளிக்கு தெய்வசகாயம் என்பவரைப் பத்திராதிபராக்கியிருப்பதாயும் நமக்குக் கடிதம் எழுதிவிட்டார். இது நமக்கு வெந்த புண்ணில் வேலுருவியதுபோல் இருந்தது! நமது பத்திராதிப மனம் அப்போது என்ன பாடு பட்டிருக்கும்? அன்பர்காள் சிந்தியுங்கள்!

மேற்கண்ட கடிதத்தைப்பற்றி சொர்னம்மாள்ஜானுக்கு நாம் ஆக்ஷேபித்து எழுதியதற்கு தாம் அப்படி ஒரு கடிதமும் எழுதவில்லையென்று சாதித்துவிட்டார். பிறகு நாம் அக்கடிதத்திற்கு ஒரு நகல் அனுப்ப, அப்போது மவுனமானார். இதனிடையில் ஏற்கெனவே பழையவருஷத்துப் பத்திரிகைகளில் நம்மால் எழுதப்பட்டுள்ள பத்திராதிபர் கலத்தை எடுத்து திராவிடாபிமானியில் பிரசுரித்து, 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலுள்ள விஷயங்களை அப்படியப்படியே எடுத்து வெளியிட்டும் கம்பாஷிடரைக்கொண்டு பத்திரிகையை நமது பெயருடனும் வெளியாக்கினார்!

நாம் பின்னும் பார்ப்போமென்று மே மாதம் 4-ம் தேதி பத்திரிகைக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் ஸ்ரீரங்கத்திலிருந்தபடியே எழுதி "பைந்திய மாய்கைகளின் விநோதம்" என்ற தலையங்கத்தையும் சேர்த்து அனுப்பினோம். நமது வகை மனுஷர்களை சேலத்திற்குப் போகச்செய்து பல நல்ல யோசனைகளையும் சொன்னோம். நாம் எவ்வளவோ தூரம்

அனுஸரித்துச்சென்றுங்கூட, சிறிதாகினும் நன்றியுணர்தலான தன்மையுமின்றி, வேறுபட்டுப்போயினர். இரவு பகல் கண்விழித்துப் பேணவும் கையுமாகப் பாடுபட்ட நமது பத்துவருட மனோ உழைப்பையும், சிரமங்களையும் அற்பமும் எண்ணாதவராய்,—அந்தப் பிரயாசையை உணரக்கூடிய வித்தியாவல்லபம் அந்த அம்மைக்குச் சற்றும் கிடையாதாதலின்,--

நம்மைப் பத்திராதிபர் ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டதாக

விஸ்வாசமின்றி நிர்த்தாக்ஷண்யமாய்த் திடீரென்று நமக்கு ஒரு கடிதம் சொர்னம்மாள்ஜான் அனுப்பிவிட்டார்! அந்தக் கடிதத்தை ஆக்ஷேபித்து நாம் அனுப்பிய ரிஜிஸ்தர் கடிதத்திற்கு இன்றுவரை எவ்வித பதிலும் இல்லை.

விவகார மார்க்கத்தில் நாம் பிரவேசிப்பின், நம்மைத் 'திராவிடாபிமானி'ப் பத்திரிகையிலிருந்தும் விலக்குவதற்கு சொர்னம்மாள்ஜானுக்கு எவ்வித சுதந்தரமும் ஏற்படமாட்டா. அதற்குவேண்டிய எழுத்துமூலமான ஆதாரவுகளெல்லாம் நம்மிடம் உள்ளன. பால்யமுதற்கொண்டு நாமும் ஜான்நாடாரும் ஒருவருக்கொருவர் பிராணமித்திரர்களாய் எத்துணையோ பிரேமையுடனும் அன்பு குலாவி ஒருமித்து நின்ற அந்த மேன்மையான வாழ்க்கைக்கு—ஆத்ம நட்புக்கு—இவ்விவகார மார்க்கம் அழகாகாதென்றும், அவர் மனைவியின்மீது வழக்கு தொடருவது உசிதமாயிராதென்பதைக் கருதியும்—அந்தக் காலஞ்சென்ற உத்தமரையே இப்பூவுலகில் இன்னும் சிலநாள் இருக்கவைப்பதற்கு நாம் கொடுத்துவைக்காதபோது, இந்தத் திராவிடாபிமானிக்காக நமக்கு விவகாரமேதற்கென்பதை உத்தேசித்தே நமக்கு இயற்கையாயுள்ள ஸாந்த சித்தத்துடனும்,

சென்றன செல்க

என்று மனம்பொறுத்து ஸகித்துக்கொண்டுவிட்டோம். சத்தியத்தையே கடைபிடித்து உண்மையுடனும் உழைத்ததற்கு நமக்குக் கடைசியில் கிடைத்தபலன் இதுவே!

ஆரம்பமுதற்கொண்டு ஒவ்வொரு விஷயத்திற்கும், பணம் சம்பந்தமான காரியங்களுக்கும், வரவு தொகைகளுக்கும், சொர்னம்மாள்ஜானின் அபிப்பிராயத்தையும் கையொப்பத்தையும் பெற்றே நாம் நிர்வகித்து வந்திருப்பதால்,- வேறெந்தவகையிலும் நம்மீது பழி சுமத்த முடியாமையின்,— பத்திரிகை காலதாமதமாக வெளியாகிற தென்கிற ஒருபிழையை நம்மீது ஏற்றி, அதற்காக நம்மை விலக்கிவிட்டதாக சொர்னம்மாள்ஜான் வேது உண்மையான சங்கதிபோல--ப் பத்திரிகாபிமானிகளுக்குத் தெரிவிப்பதானார். இந்த சமாதானமும் அவரது காரியங்களும் எம்மட்டில் சரியானதோவென்பதை நமது நேயர்களின் பிரியத்திற்கே விட்டுவிடுகின்றோம்.

நம்மீது-அபிமானம் வைத்த 'திராவிடாபிமானி' சந்தாதாரர்களிற் பலர் நமக்கு அநேக லிகிதங்கள் வரைந்துள்ளார். திராவிடாபிமானிப் பத்திரிகையின் ருசி முற்றிலுமே குறைந்துவிட்டதென்றும், ஏற்கெனவே

வெளிவந்த விஷயங்களே அடிக்கடி பிரசுரிக்கப்படுகிறதென்றும் தெரிவித்து நம்மை மற்றொரு வாரப்பத்திரிகை ஆரம்பிக்குமாறும் வற்புறுத்தியிருக்கின்றனர். அந்த நண்பர்களின் அன்புக்காக நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

ஏப்பிரல்மீ 27-; மேமீ 11, ஜுன்மீ 1, ஜுன்மீ 27, ஆகஸ்டுமீ 17,—இன்னும் நெடுகக் குறிப்பிட்டுச் செல்லலாம்,—இத்தேதிகளில் வெளியான திராவிடாபிமானியின் பத்திராதிபர் கலமான தலையங்கங்கள் முன்பு பழயவருஷங்களில் நம்மால் எழுதப்பட்டவைகளாகும். அவற்றைச் சிறிது திருத்தியும் மாற்றியும் போடப்பட்டுள்ளன. இதுமட்டுமென்று: விரிக்கிற் பெருகும். பழய வால்யங்களைப் பார்த்தால் நன்கு தெரியலாம்.

'திராவிடாபிமானி'யின் பழயவருஷங்களின் வால்யங்களைப்பார்த்து, அதில் நாம் எழுதியுள்ள பத்திராதிபர் கலத்தையும் பிற விஷயங்களையும் சந்தர்ப்பத்திற்குத் தக்கதுபோல் கைசரக்கும் சேர்த்து மாற்றி, அடிக்கடி திராவிடாபிமானியில் வெளியிடப்படுவதுடன், "சுதேசமித்திரன்" பத்திரிகையிலிருப்பனவற்றை அப்படியப்படியே எடுத்துப் பதிப்பிப்பதுமாய் தற்காலம் "திராவிடாபிமானி" நடத்தப்படுகின்றது. எப்படியெப்படியோ சரிசெய்யப்படுகிறது! பத்திராதிபருக்குக் கடிதங்கள்—என்று பத்திரிகையில் பிரசுரமாகுமேயன்றி, 'புரோப்ரைட்டிரஸுக்குக் கடிதங்கள்' என்று இப்போது திராவிடாபிமானிப் பத்திரிகையிலன்றி வேறெந்தப் பத்திரிகையிலும் வெளியானதை இதுவரை எவரும் கண்டிரார். பத்திராதிபர் ஸ்தானத்தில் மானேஜர் அபிப்பிராயம் தரும் புதுமை திராவிடாபிமானியில்தான் பார்த்தோம். பத்திரிகா ஒழுங்குகள்—என்று முறையொன்றுண்டு. எல்லாம் மாறியது! இதனையும் நேயர்கள் நன்கறிந்திருப்பர்.

சென்ற பத்துவருடங்களாக நமது உயிர்த் தோழருடன் அந்தரங்கத்தில் உண்மைப் பத்திராதிபராக நாம் இருந்து, நம்மால் நடைபெற்றுவந்த 'திராவிடாபிமானி'ப் பத்திரிகையைப் படித்து, அதன்மூலமாய் நம்முடைய குணங்களையறிந்து நம்மை மனப்பூர்வமாய் அபிமானித்து ஆசீர்வதித்துள்ள விவேகிகளான பத்திரிகாபிமான சிரேஷ்டர்களும் பண்டித ரத்னங்களும் நமது இந்த விக்ஞாபனத்தை யுணர்ந்து உண்மையைக் கிரகிக்கும்படி கோருகிறோம். நமது நேயர்களான திராவிடாபிமானி சந்தாதார்களுக்கு நம்மீதுள்ள அபிமானம் - பாந்தவ்யம்—எக்காலத்தும் மாறாதிருக்கும்படி பகவான் கிருபை செய்யட்டும். எல்லாவற்றிற்கும் பொதுவாக கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் பாதம் துணை.

இங்ஙனம்:

உங்களனைவரையும் இருதயத்தில்வைத்து நேசித்தும் உங்கள் அன்புக்குரிய

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,

திராவிடாபிமானியின் பூர்வ பத்திராதிபர்.

☞ நமது அன்பர்கட்கு ஒரு வேண்டுகோள்.
வாரப்பத்திரிகைக்கு-ஒரு வருஷத்திற்கு முன்பணம் செலுத்துபவர் இனும் புஸ்தகமோன்று பெறுவர்.

வாரவர்த்தமானி.

இந்தியா, பர்மா, ஸிலோன், வருஷசந்தா ரூபா நான்கு.
அயல் தேசங்கள் ... ... ரூபா ஐந்து.

ஒரு புது வாரப்பத்திரிகை. குறித்தநேரத்தில் வெளிவருவது. காலத்தையொட்டிய கருத்துகள் ததும்பியது. சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய அலங்கார வசனமழை! ஒவ்வொரு விஷயமும் மூளையுருக வருக—யோசித்து எழுதப்படுவது. கத்தரிக்கோலால் மற்ற பத்திரிகைகளிலிருந்து கத்தரித்து எடுத்து ஒட்டப்படுவதல்ல. ஒவ்வொரு குறிப்புகளும் மிக்க ஸ்வாரஸ்யந் தரும். பத்திரிகை எட்டு பக்கமுள்ளது. கையால் இழுத்து ஆயிரம் காபிகள் அச்சிடுதற்கு காலையிலிருந்து மாலைவரையில் செல்லுகிற கைப்-பிரஸில் அச்சிடப்படுவதன்று. ஒரு எழுத்து ஒட்டையும், இன்னொரு எழுத்து மறைந்தும், பல அக்ஷரங்கள் கண்களுக்கே புலப்படாமலும், ஒருபக்கம் அதிக மையும், இன்னொருபக்கம் அக்ஷரங்களே தெரியாமல் வெளுப்பாயும், க - ச - வுக்கும், ப - ய - வுக்கும், ம - ம் வுக்கும் பேதமேயின்றியுமுள்ள ஆபாசங்கள் இப்பத்திரிகையில் மருந்துக்கும் அகப்படா. உயர்தரமான இயந்திரத்தில் நேர்த்தியான மிஷின் உள்ள அச்சியந்திரசாலையில் இப்பத்திரிகை அச்சிடப்படுகிறது. உடனுக்குடன் தந்திச்செய்திகள் தெரிகிற சென்னையில் இது அச்சிடப்பட்டு திரிச்சிராப்பள்ளியில் வெளியாகும்.

1-வது பக்கத்தில்,—Rambling Notes—என்ற "மனனமாலா" தோன்றும். இத்தலைப்பின்கீழ் எப்போதும் தத்துவவிஷயங்களும், ஈஸ்வர பக்தியைப்பற்றிய விஷயங்களும் வரையப்படும். இவை யாவும் ஒரு மதத்தைக் குறித்ததல்ல. ஸர்வமத சம்மதம். தேன்போல் ருசிப்பது, பால்போல் இனிப்பது.

2 வது பக்கத்தில்,—அந்தந்த வாரத்திற்கண்ட நிகழ்ச்சிகளும் விநோதங்களும் அடங்கிய பத்திராதிபர் கலம் தோன்றும். இவை அநுபவசாரமாய் அற்புதந்தரும். உதாரணமாக திராவிடாபிமானியில் நம்மால் முன்பு வெளிவந்த (1) ஆ படிப்பே! சீர்திருத்தமே (2) பைத்தியமாய் கைகளின் விநோதம் இந்த வியாஸங்களைப் போலிருக்கும். பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதும்.

3-வது பக்கத்தில்,—அடுக்கடுக்காய் பழமொழிக் குறிப்புகள் நிரம்பி வர்த்தமானங்களுடன் கலந்து லோக ரகசியங்களை விவரிக்கும். அதன் பின்னர் வாரத்திரட்டு என்ற தலைப்பில் அந்த வாரத்தின் பிரதான விஷயங்கள் விவரிக்கப்படும்.

4-வது பக்கத்தில் —பத்திராதிபர் கலமும், துணையங்கங்களும் கம்பீரமான நடையில் அர்த்தபுஷ்டியுடன் ஜ்வலிக்கும்.

5-வது பக்கத்தில்,—யுத்தம் என்ற தலைப்பின் கீழ் இளைஞர்களும் எளிதிலுணருமாறு தெளிவாய் வரையப்படும். பத்திராதிபர் குறிப்புகள்

என்ற தலைப்பின்கீழ் அவ்வவ்வார விசேஷங்களைக் குறித்து ரஸமான சிறுகுறிப்புகள் கொடுக்கப்படும். இது படிக்கப்படிக்க பரவசந்தரும். வர்த்தமானக்குறிப்புகள் இப்பக்கத்தில் ஆரம்பம் பெறும்.

6-வது பக்கத்தில்,—வர்த்தமானக்குறிப்புகள் தொடர்ந்துவரும்.

7-வது பக்கத்தில்,—இந்தியா, பர்மா, ஸிலோன், அயல்நாடுகள் ஏனைய கண்டங்கள் இவ்விடங்களில் நடைபெற்ற விசேஷங்களைத் தெரிவிக்கப்படும்.

8-வது பக்கத்தில்,—ஸயன்ஸ் குறிப்புகள், துண்டுதுணுக்குகள், நமதுகடை முதலிய பலவும் வெளியாகும்.

ஒவ்வொன்றுக்கும் அழகான பிளாக்குகளும், படங்களும் கொடுக்கப்பட்டு பத்திரிகை மிக்க அழகுடன் கூடியதாய், உலகத்திலுள்ள சர்வஜனங்களுக்கும் பொதுவாய், சகல மதஸ்தர்களுக்கும் இன்பமாய், எல்லா ஜாதியர்களுக்கும் ஏற்றதாய், எல்லா வர்த்தமானங்களும் இருக்கப்பெற்றதாய் புறமத தூஷணையன்றி சொல்நயம், பொருள்நயம்தோன்ற எழுதப்பட்டு வரும்.

இவ்விதமான அமைப்புகளுடனும் புதிதாக நாம் ஒரு வாரப்பத்திரிகையைப் பிரசுரம்செய்ய ஏற்பாடுகள்செய்துகொண்டிருக்கிறோம். நமது பத்திராதிபத்தியத்தில் நாம் சொந்தமாக நடத்தப்புகும் புதுப்பத்திரிகையின் சிலாக்கியங்களைக் குறித்து நம்மை 10 - வருஷகாலமாக நன்கறிந்த நேயர்கட்கு நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. இப் புதுப்பத்திரிகையை அபிமானித்து சந்தாதாரர்களாகச் சேரவிரும்பும் கனவான்கள் அனைவரும் தத்தம் அபிப்பிராயங்களையும் ஆர்டர்களையும் நமக்கு உடனே அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்களின் சொந்த பத்திராதிபராகிய நம்மைக் கைவிடாது ஆதரிக்க வேண்டுகிறோம். இனும் புஸ்தகமும் உண்டு. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

☞ இன்னொன்று—

“பிரஜாநுகூல”னைப்பற்றி.

நம்மால் தற்போது பிரசுரமாகிவரும் “பிரஜாநுகூலன்” பத்திரிகையையும் நமது நேயர்கள் அபிமானிக்க வேண்டுகிறோம். இப்பத்திரிகையின் கடைசிபக்கத்தில் அதன் அவசியத்தையும், உயர்நலங்களையும் அது ஒவ்வொரு குடும்பத்திற்கும் முக்கியமென்பதைக்குறித்தும் விவரமாகத் தெரிவித்திருக்கிறோம். நம்மீது விஸ்வாசம்வைத்து “பிரஜாநுகூலனை” அபிமானித்து நமது முயற்சியை ஆதரிக்குமாறு பிரார்த்தனை புரிகின்றோம். இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்களாவதற்கு ஆர்டர்கள் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நல்லவர்கள் முடிவில் நன்மையையே கண்டடைவார்கள். அன்பர்களின் கடிதங்களை எதிர்பார்க்கிறோம். கடவுள் அனைவருக்கும் மங்களத்தைச் செய்யட்டும்.

பத்திராதிபர்.

☞ வாரப்பத்திரிகைக்கும், “பிரஜாநுகூலன்” பத்திரிகைக்கும் ஆர்டர் கொடுங்கள். இன்றே அனுப்புங்கள், இன்றே செய்யுங்கள்.

விலாஸம் :— எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,
பத்திராதிபர் “பிரஜாநுகூலன் ஆபீஸ்,”
ஸ்ரீரங்கம், திருச்சி.

பிரேமநாதன்.

துப்பறியும் ஒரு புது தமிழ் நவீனகம்.

(Copy Right Registered.)

"பிரஜாநுகூலன்" பத்திரிகையில் இதுகாறும் வெளிவந்திருக்கும் 1-முதல் 10-வரையுள்ள அத்தியாயங்களின் சார - சங்கிரகம்.

1

அவள் என் மனைவி.

கதாநாயகன் பிரேமநாதன். அவனுடைய தாய்மாமனுவார் ரங்கபாஷியம் நாயுடு. அவர் பெண்வேடந்தரித்து வெளியிற் புறப்பட்டுவிடத் தயாராயிருக்கிறார். வீதியில் அவருக்கென்று ஒரு மோட்டார் நிற்கிறது. மாடியில் அவர் இருக்கும் அறைக்குவெளியே பிரேமநாதனின் சவம் கிடப்பதை போலீஸார் கண்டுபிடித்துவிடுகிறார்கள். அவர் அக்கொலைக்குற்றத்திற்காகக் கைது செய்யப்படுகிறார். பிரேமநாதனைக் கொன்றது எவரோவென அங்கலாய்த்து, அவனிடத்துத் தமக்கு இருந்த அன்பையெல்லாம் வெளியிட்டுப் பிரலாபம் நிறைந்தவராகிறார். ஸக்திக்கு மீறிய துயரம் காரணமாக அவர் சித்தஸ்வாதீன மற்றவராய்விடுகிறார். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடுகிறது. பிரேமநாதனின் சவம் திரிச்சி முனிசிபல் ஆஸ்பத்திரியில் பரிசிலனை செய்யப்படுகிறது. அறுத்துச் சோதிக்கவேண்டுமெனத் தம்முள் பேசியவராய் டாக்டர் இராமநாதமுதலியார் அதற்காக ஆயுதங்கள் எடுத்துவர ஆஸ்பத்திரியின் ஓர் அறைக்குட் செல்கிறார். அதேசமயம் ஒரு துப்பாக்கியின் வெடி கேட்கிறது. ஒரு பெண் சுடப்பட்டுப் போகிறாள். "அவள் என் மனைவி" என்று ஆஸ்பத்திரி சேவகன் கதறுகிறான். பிரேமநாதனின் சவமும் இதனிடையில் மாயமாகிவிடுகிறது.—காணோம்! டாக்டர் திகைக்கிறார்.

2

இருவர் நட்பும் ஸம்சயமும்.

துப்பறியும் ஸஞ்சிவபாபு வருகிறார். டாக்டர் இராமநாத முதலியாரைச் சந்திக்கிறார். அவருக்கும் ரங்கபாஷியம் நாயுடுவுக்கும் அதிபால்ய நேசம் என்பதை ஸஞ்சிவபாபு அறிந்துவிடுகிறார். அந்த நேசத்தில் இராமநாதமுதலியார் தமது நண்பரான ரங்கபாஷியத்தின் கொலைக்குற்றம் ருசுப்படாதுபோதுமாறு பிரேமநாதனின் சவத்தை எங்கோ மறைத்துவிட்டதாகவும், அதைச் சேவகனின் மனைவி கண்டுவிடவே—அது அவளால் வெளிக்கு வராதிருக்க அவளை டாக்டர் இராமநாதமுதலியார் சுட்டுவிட்டதுபோலவும் வெளிக்கு சந்தேகங்கள் ஏற்படுகிறதாக அவருக்கு விவரிக்கிறார். ரங்கபாஷியம், ராமநாதமுதலியார்—இவ் "விருவர்நட்பும் ஸம்சயமும்" பொருத்தமாக அமைந்து நிற்கிறது.

3

ஒரு சிக்கலான கேஸ்.

கொலையுண்ட பிரேமநாதனுக்கு கனகவல்லி என்ற ஒரு தமக்கையுண்டு. அத்தமக்கையினது கணவனின் பெயர் ஜெகநாத நாயுடு. அவர் வீட்டு மாடியில்தான் ரங்கபாஷியம் நாயுடு கைதியானது. பிரேமநாதனின் சவம் கிடந்ததும் அவ்விடத்தில்தான். கொலையுண்ட மேற்கண்ட இடம் போலீஸ் இனிஸ்பெக்டர் நரசிம்மராவாலும், துப்பறியும் ஸஞ்சீவபாபுவினாலும் சோதனையாகிறது. பிரேமநாதனை ரங்கபாஷியம் கொன்றிருக்க முடியாதென்பது ஸஞ்சீவபாபுவின் வாதம். போலீஸ் இன்ஸ்பெக்டர் இது "ஒரு சிக்கலான கேஸ்" என்கிறார்.

4

காயமுண்டானது மரணத்திற்கு முந்தியா அல்லது பிந்தியா?

சமயபுரம் என்பது திரிச்சிக்கு எட்டு மைலில் உள்ளது. அங்கு ஒரு கூரை வீட்டில், உள்தாள்ப்பாள் போட்டுக்கொண்டு ஒருவன் ஒரு சோபாவின்மீது உட்கார்ந்தபடியே, தனது வலது தொடையின்பேரில் வைத்திருந்த—தன்னுடைய வலதுகையில்—அதற்கு முன்னதாகவே சுட்டு ஆன—பிஸ்தோலைப் பிடித்துக்கொண்டு மரணமாயிருப்பதாகக் காணப்படுகிறான். பெயரும், அவன் ஊரும் எதுவும் விளங்கவில்லை. அது தற்கொலையல்லவென்றும், பலர் சேர்ந்து கட்டைகளால் அவனை அடித்துக் கொன்றுவிட்டு, பின்னர் சோபாவில் அவனை உட்காரவைத்து, தானே தற்கொலை செய்து கொண்ட பாவனையாக எவரோ இப்படித் தயார்செய்திருக்க வேண்டுமென்றும் ஸஞ்சீவபாபு சொல்கிறார். அதற்கு அவன் மேலுள்ள பல காயங்களையும் குறிப்பிடுகிறார். "காயமுண்டானது மரணத்திற்கு முந்தியா—அல்லது பிந்தியா?" என்று போலீஸ் இனிஸ்பெக்டர் ஸஞ்சீவபாபுவுடன் ஆராய்கிறார். பிரேமநாதனின் சவம் கிடந்த இடத்தில் காணப்பட்ட கட்டைகளையொத்த அதேவிதமான கட்டைகளே இங்கும் இவனைக் கொல்வதற்கும் உபயோகப்பட்டிருப்பதைப்பற்றிச் சிந்திக்கிறார். போலீஸ் இனிஸ்பெக்டர் போய்விடுகிறார். ஸஞ்சீவபாபு மட்டும் அவ்விடமேதங்கி, அக்கொலைநேரிட்ட ஸ்தலத்திற்கு அருகேயுள்ள இடங்களையெல்லாம் சோதிக்க முயலுகிறார்.

5

விஜயநாதனின் விவகாரம்.

ரங்கபாஷியம் நாயுடுவினுடைய மனைவியின் பெயர் ஜனகலக்ஷ்மி. அப்பெண்மணி காவிரியில் நீராடி வீட்டிற்குச்செல்லும் சமயத்தில், அவளை இன்னாரென்று அறியாமலே ஸஞ்சீவபாபு பின்தொடர்கிறார். அவளது 10-வயதில் எடுத்த படத்தைத் தான் பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கிறார். அப்படத்தை விஜயநாதனிடம் பெற்றதாக விவரிக்கிறார். ஜனகலக்ஷ்மி, அப்படம் விஜயநாதனின் கைப்பட எழுதியதாகலாமென்றும்

தன்னை ஒருகாலம் அவன் கற்பழிக்கக் கருதியவனென்றும், ரங்கபாஷியத்தால் அது தவறிற்றென்றும் "விஜயநாதனின் விவகார"த்தை விரிவாய்ச் சொல்கிறாள். பிறகு ரங்கபாஷியத்துக்கும் தனக்கும் விவாகமாகி இராஜம்மாள் என்ற ஒரு பெண் பிறந்து, அப்பெண்ணைப் பிரேமநாதனுக்குத் தரவிருக்க, இதனிடையே பிரேமநாதன் எங்கோ ஓடிவிட்டதாகவும், இந்த சம்பவங்கள் நிகழ்ந்து நெடுநாளானபின்னர் இப்போதுதான் அவன் இவ்விடம் திரும்பிவர, யாராலோ அவன் கொல்லப்பட்டுப்போனானென்றும் ஸஞ்சீவபாபுவுக்குத் தெரிவிக்கிறாள். ஜனகலக்ஷ்மியின் தாயார் பெயர் சுப்பம்மாள் ஆகும்.

6

கடவுள் சேர்த்த ஸதிபதிகள்.

ஜனகலக்ஷ்மி, ரங்கபாஷியம்! இவ்விருவரும் "கடவுள் சேர்த்த ஸதிபதிகள்"ஆவர். அவர்களது சென்றுபோன நாட்களின் காதற்செய்திகள் இவ்வத்தியாயத்தில் பிரஸ்தாபமாகின்றன. சுருக்கிக்கூற இயலாமைக்கு வருந்துகிறோம்.

7

கனகவல்லியும் இரு குழந்தைகளும்.

நேசர்கள் புடைசூழ ஜகநாதநாயுடுவின் உல்லாஸக் கச்சேரி. அவர் அதிகவட்டி வாங்கும் விநோதங்கள். தனது வீட்டுச்சோதனை யொன்றில் பத்திரங்கள் வைக்கப்பட்டிருந்த கைப்பெட்டி யொன்று எவ்விதமோ தவறிப்போயிருக்கிறதென்று ஜகநாதநாயுடு எங்குகிறார். தனது மனைவியான கனகவல்லியின் தாய்வீட்டுச் சொத்துகளை—அவளுக்கு—தான் புருஷன்—என்ற பாத்தியதையைக்கொண்டு தனதுவசம் செய்துகொள்ள ஜகநாதநாயுடு முயலவே, கனகவல்லியின் தாயான தனலக்ஷ்மி அதைத் தடுக்க முயல்கிறாள். ஸஞ்சீவபாபு வருகிறார். தனலக்ஷ்மி அவரிடம் தனது பரிதாப சரித்திரம் உரைக்கிறாள். தனலக்ஷ்மிக்கு ஒரு குமாரனும் இரு குமார்த்திகளும் உண்டு. மூத்த புதல்வி இளமையில்தானே காணமற்போனாள். ஒரே புத்திரனான பிரேமநாதன் சிறுபருவத்திலேயே ஓடிவிட்டான். அவனைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டுச்சென்ற அவனது தந்தையாகிய வேணுகோபால் நாயுடு தமது ஸர்வ சொத்துக்களையும் தனது குமார்த்தியான கனகவல்லிக்கே எழுதிவைத்து, அவளது ஆதரவில் தன் மனைவியான தனலக்ஷ்மி இருக்கவேண்டுமென்றும், பிறகு ஒரு உயில் ஏற்படாவிடில் இதுவே ஊர்ஜிதமென்றும் உயில் செய்துவிட்டுப்போக, அந்த உயிலின்படி கனகவல்லிக்குச் சொந்தமாகிற சொத்துகளை, அவள் கணவனான ஜகநாதநாயுடு—தான்—அவளுக்குப் புருஷன்—என்ற பாத்தியதையைக்கொண்டு அபகரிக்கப் பார்க்கிறார். கனகவல்லியினது இரு குழந்தைகளையும் எவ்விடமோ ஜகநாதநாயுடு மறைத்துவைத்திருக்கிறார். 'கனகவல்லியும் இரு குழந்தைகளும்" என்னால் அவசியம் காப்பாற்றப்படுவர்—என்று ஸஞ்சீவபாபு தனலக்ஷ்மிக்கு உறுதி யளிக்கிறார்.

8

சிறுவனும் துண்டுகளும்.

ரங்கபாஷியம், கொலைக்குற்றஞ் சாட்டப்படுவதற்கு மூன்று தினங்கட்கு முன்பு, ஜெகநாதநாயுடுவின் வீட்டிற்குச் சென்றவராவார். காரணம் - அவர் தாமோதரம் ஐயங்கார் என்ற ஒருவருக்கு ஜாமீன் கையெழுத்திட, அந்த ஐயங்கார் மறைந்துகொள்ள, அக்கடன் வாரண்டு ரங்கபாஷியத்தின் மீது திரும்ப, அவர் ஜகநாதநாயுடு வீட்டின் மேல்மாடியில் மறைந்துகொள்கிறார். ஸஞ்சீவபாபு இதை ஆராய்கிறார்.

அவ்விதம் வாரண்டு வாங்குமாறு அந்தக் கடன்தந்த செட்டியாருக் குத்தூண்டி, அவ்விதமே வாரண்டு பிறக்கச்செய்து, ஷை ஐயங்காரை மறைந்துகொள்ளவைத்து, அவ்வாரண்டை ரங்கபாஷியத்தின்மேல் வரப்பண்ணினவர்கள் விஜயநாதனும் ஜகநாதநாயுடுவுமே யென்றும், வாரண்டு பிறந்ததும் தன் வீட்டில் மறைந்திருக்கும்படி ஜகநாதநாயுடு வற்புறுத்தி ரங்கபாஷியத்தை அழைத்துச் சென்றாரென்றும், அவ்விதம்சென்ற மூன்றாம்நாள் பிரேமநாதன் கொலைநேர்ந்து, அந்தப் பழி ரங்கபாஷியத்தின்மேல் விழுகிற கிறதென்றும்—ஆகவே இக்கொலையில் விஜயநாதன், ஜகநாத நாயுடு இவர்களுக்கு ஏதாவது சம்பந்தம் இருக்கக்கூடாதாவென்றும் ஸஞ்சீவபாபு யோசிக்கிறார்.

இவர்கள் சொற்படி மறைந்துகொண்டதாய் எண்ணப்படுகிற ஐயங்கார், சில தினங்களுக்குப்பிறகு திடீரென்று இறந்துவிடுகிறார். இறப்பதற்கு முன் அவர் உறிஞ்சிய மூக்குப்பொடியில் மூளையை யுருகவைக்கும் திராவகம் கலக்கப்பட்டிருப்பதை ஸஞ்சீவபாபு கண்டுபிடிக்கிறார். அதையொரு சிறுவன் ஷை ஐயங்காரிடம் தந்ததாகத் துப்பறிகிறார்.

இது நிற்க, பிரேமநாதன்- தான் - கொலைசெய்யப்படும் தினத்தன்று காலையில் இராஜம்மாளுடன் காதற் சம்பாஷணையி லிருந்தபோது ஜகநாதநாயுடுவின் குமாரன் வந்தழைக்க, அதன்மேல் பிரேமநாதன் ஜகநாதனிடம் போனதாகவும் அறிகிறார். அதற்கு மேற்பட்டே கொலை நேர்கிறது. ஜகநாதநாயுடுவினது வீட்டின் அருகேயுள்ள தோட்டத்திலும், சமயபுரத்தில் இடிந்த கிணற்றினுள்ளும், அச்சமயபுரத்து வீட்டில் தற்கொலைசெய்துகொண்டு பிஸ்தோலுடன் சவமாய்க் கிடப்பவனுடைய உள்சட்டையிலுமாக, முறையே ஒவ்வொரு துண்டாய்—ஆக மூன்று துண்டுகள் அகப்பட,—அம்மூன்றிலும் பிரேமநாதனின்பெயர் காணப்பட—இதென்ன மாயம்—என்று ஸஞ்சீவபாபு மயங்குகிறார். ஐயங்காருக்குப் பொடிதந்த சிறுவன் யாவன் எனச் சோதிக்கிறார். அச் "சிறுவனும் துண்டுகளும்" அவரது மூளைக்கு அதிக வேலையை வைக்கின்றன. இவ்விஷயங்களை ஸஞ்சீவபாபு ஜனகலக்ஷ்மிக்குச் சொல்கிறார்.

9

சுற்றுச்சூழற்சியிலே சற்றுவெளிச்சம்.

ஐயங்காருக்குப் பொடிதந்த சிறுவன் கனகவல்லியின்—அதாவது ஜகநாதநாயுடுவின்—குமாரனான விஜயராகவன்—என்று ஸஞ்சீவபாபு அறிகிறார். தபாற்காரனான முத்துஸாமி என்பவன் தன்னைக்கண்டு பயந்ததிலிருந்தும், அவன்மீது ஸம்சயித்து அவன்மேல் ஒரு கண் வைக்கிறார் ஜகநாதநாயுடுவின் நண்பனான விஜயநாதனைச் சென்னையில் சந்திக்கிறார். இரங்கூனில் சஞ்சீவபாபுவினிடம் தான் தந்த ஜனகலக்ஷ்மியின் படமானது தன் கையாலேயே எழுதப்பட்டதாமென்று விஜயநாதன் உண்மையை விவரிக்கிறான். விஜயநாதனின் பேச்சுகளால் ஜகநாதநாயுடுவுக்கும் அவனுக்கும் நெருங்கிய நட்பென்றும் அறிகிறார். சில தினங்கள் அவன் வீட்டிலிருந்து சில காரியங்களை ரகசியமாகச் செய்கிறார். "சுற்றுச்சூழற்சியிலே சற்று வெளிச்சம்" உண்டாகிறது.

10

பல விஷயங்கள்

ஜனகலக்ஷ்மி தனது பிரிய பர்த்தாவான ரங்கபாஷியத்தைச் சிறைச்சாலையிற்கண்டு துக்கித்துவிட்டு இல்லம் திரும்புகிறாள்.

கனகவல்லி தனது பிதிரார்ஜித சொத்துக்களைத் தன் கணவனான ஜகநாதநாயுடு துர்விநியோகம் செய்வதைத் தடுத்தற்காக தன் பர்த்தாவின் மேல் வியாஜ்யம் கொண்டுவர, அது விசாரணையாகிறது.

கனகவல்லியின் விவாககாலத்தில் 12 - ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகளை ஜகநாதநாயுடு கனகவல்லிக்குப் போட்டதாகத் தெரிகிறது.

விஜயநாதன் ஒரு நாடகக்காரனென்று அவன் சரித்திரம் விவரிக்கப்படுகிறது. இதில் சாக்ஷிக்காக ரங்கபாஷியம்நாயுடு கொண்டுவரப்படுகிறார். அவர் பைத்தியத்தால் பல பல உளறுகிறார். ஸஞ்சீவபாபு தாம் வேணுகோபால் நாயுடுவினது வேலைக்காரனான அரசப்பன் வீட்டில் கண்டெடுத்த இன்னொரு உயிலைக் கோர்ட்டில் ஆஜர்செய்கிறார்.

அந்த உயில்,—பிரேமநாதனைத் தேட வேணுகோபால் நாயுடு பல இடங்களுக்கும் சென்றபோது, பம்பாயில் பிளேக்கினால் அவர் இறக்க நேரிட்ட சமயத்தில், அரசப்பன் அருகேயிருக்க, அப்போது அவரால்,—எழுதப்பட்டதாகும்.

அந்த உயிலில், முன்பு தான் எழுதிய உயில் செல்லாதென்றும், இப்போதுதான் எழுதும் உயிலே ஊர்ஜிதமென்றும், (1) தனது ஸர்வசொத்துக்களும் தனது மனைவியான ஜனலக்ஷ்மியின் தம்பியாகிய ரங்கபாஷியத்திற்கே சேரவேண்டுமென்றும், (2) தனது மனைவி, ரங்கபாஷியத்தின் ஸம்ரக்ஷணையில் இருக்கவேண்டுமென்றும், (3) பிற்பட்டு பிரேமநாதன் ஊர்வந்து

சேரும் பக்ஷத்தில்—அந்த சொத்தில் பாதி பிரேமநாதனுக்கு என்றும், (4) ரங்கபாஷியத்தின் குமார்த்தியான இராஜம்மாளைப் பிரேமநாதன் மணக்க ஒப்பினுல் அப்போது முக்கால்பாக சொத்து பிரேமநாதனுக்கென்றும், (5) கனகவல்லிக்கு ரங்கபாஷியத்தின் இஷ்டம்போல் சீதனவரிசைகள் தரலாமென்றும்—அந்த உயிலில் கண்டிருந்தது. அது பம்பாயில் ரிஜிஸ்தரார் ஆபீசில் ரிஜிஸ்தராகி இருந்தது. அந்த உயிலின் ஆதாரத்தைக்கொண்டு கோர்ட்டார், ஜகநாதநாயுடு தன் மனைவியான கனகவல்லியின் சொத்துக்களின்மீது பிரவேசிக்கக்கூடாதென்று தீர்ப்பளிக்கின்றனர்.

ஜகநாதநாயுடு தனது குமாரனுன விஜயராகவனின் மூலமாக விஷம் கலந்த மூக்குப்பொடியை தாமோதரம் ஐயங்காருக்குத் தந்து அவர் இறந்துபோக வழிதேடியதாக ஸஞ்சீவபாபு சாக்ஷிகளால் ரூபிக்கிருர் அவ்விஷப்பொடி தந்த குற்றத்திற்காக ஜகநாதநாயுடு கைதியாகிருர். தனது தந்தையின் ஏவுதலால் விஷப்பொடியைக் கொண்டுபோய்த் தந்த விஜயராகவன் அவனது சிறு பருவத்தைக்கருதி கோர்ட்டாரால் மன்னிக்கப்படுகிருன்.

ஜகநாதநாயுடு — தாம் — பொடிதந்த குற்றம் வெளியாகாதிருக்க வேண்டி, வீட்டிற்குள்ளேயே ரகசியமாக மறைத்துவைத்திருந்த அவரது இரு குழந்தைகளையும் கோர்ட்டார், அக்குழந்தைகளின் தாயான கனகவல்லியின்வசம் ஒப்புவிக்கின்றனர்.

பிறகு, தபாற்காரனுன முத்துஸாமியைச்சோதிக்க அவன்வீட்டிற்கு ஸஞ்சீவபாபு செல்கிருர். முத்துசாமி,--மேற்பட்டு—அதற்கு மேற்பட்டு-என்று ஒவ்வொரு பேச்சினிடையிலும் அனுவசியச்சொற்களை உபயோகப்படுத்தும் இயல்பினன். இப்படிப் பேசுதலைப்பற்றி ஒரு மறுப்பு வந்து, அதன் பின்னர்—கதைத்தொடர்ச்சியும், ஸஞ்சீவபாபுவின் சூழ்ச்சியும் ஆரம்பமாகிறது.

☞ 10-அத்தியாயங்களின் சாரம் இது. இந்த அபூர்வ துப்பறியும் நாவல் 20-அத்தியாயங்களுடனும் ஸம்பூர்ணமாகின்றது. 10-வது அத்தியாயத்தின் பின்பாகத்திலிருந்து, தொடர்ச்சியாய் டிஸம்பர்மாத ஸஞ்சிகை முதற்கொண்டு பிரஜாநுகூலனில் பிரசுரமாகி முடிவுபெறும். "பிரஜாநுகூலன்" பத்திராதிபரால் இது எழுதப்படுகிறது.

☞ அடுத்த பத்திரிகையிலிருந்து தொடர்ந்து வரும்.

குறிப்பு :—இந்த நாவலின்விவரம் சுருக்கி இங்கு தெரிவித்திருப்பதால்—மற்றொரு முறையும் வாசித்துக்கொள்ளின், இன்னும் தெளிவாய்ப் புலப்படும். அவ்விதமேசெய்க.

பிரபஞ்ச விலாஸம்.

(All Right Reserved.)

1. உலகத்திலுள்ள பலவிதமான சங்கீதக் கருவிகளுள்ளும் மிகவும் திருத்தமான கருவி மானிடர்களுடைய வாக்கு.

2. புஸ்தகமாகிய நண்பனுல், நமது ஹிருதயமாகிய ஆகாசத்தில் ஞானமென்னும் சூரியன் உதிப்பான். அந்த சூரியனுல் ஸகல சுகங்களேயும் அடையலாம்.

3. என் மனமாகிய வீட்டில் கவலேகளாகிய பல விருந்தாளிகள் வந்து உட்காருகின்றனர். இவர்களுக்கு அன்னம் படைக்க என்னுலாகுமா?—என்கிருர் ஒருவர்.

4. பணக்காரர்கள் ஏராளமான திரவியத்தை ஒரு பாங்கில் போட்டு பத்திரப்படுத்திச் சில காலம் கழித்து வட்டியும் முதலும் அடைவதுபோல, புத்திசாலிகள் அநேகம் கிரந்தங்களேப் படித்து அவற்ருல் தம் புத்தியை விசாலப்படுத்திக்கொண்டு, இதரர்க்கும் உபயோகப்படுமாறு நல்விஷயங்களேக் கூறுவர்.

5. தனக்கொன்றும் வேண்டியதில்லே யென்பதில் ஸந்தோஷம் அதிகம். சுகமனுபவிக்க ஆசைகொள்பவனுக்கோ துக்கம் துணே வருகிறது.

6. அற்ப காரியமாஞலும் அதைப் பிறருக்கென்று செய்தால் அதில் பெருமையுண்டு. மனுஷ்யர்களுடைய உணர்ச்சிக்கேற்றபடி மூளேயின் தன்மை மாறுகிறது.

7. யாரிடத்தில் சந்தேகம் கொள்ளுகிறையோ அவனே வேலேயிலமர்த்தாதே. வேலேயில் வைத்துக்கொண்டபிறகு ஒருவனிடம் அவநம்பிக்கை கொள்ளாதே. நீ சொல்லும் விஷயங்களெல்லாம் உண்மையென்று நம்பாதே. நம்பிப் பிறரிடம் சொல்லாதே.

8. மனுஷ்யர்களுக்கு ஆசையாலேதான் கோபம் உண்டாகிறது. ஆசை கெடுகிற சமயம் கோபம் ஆரம்பமாகிறது.

9. வெறுந் தண்ணீரை ஒரு சீஸாவில்கொட்டி, ஏதேனும் வர்ணப்பொடியைத் தூவி அதன் நிறத்தை மாற்றி கார்க்கால் அடைத்து, அம்மருந்து அமெரிக்காவிலிருந்து வந்த ஆரோக்கிய எண்ணெயென்றும், ஹிமாசலத்தில் ஒரு யோகீசுவரர் சொல்லிக் கொடுத்த முறைப்படி தயார்செய்த பச்சிலைக்கஷாயமென்றும் கூறி அதையுண்டு பாலும் நெய்யும் சாப்பிட்டால் தேகம் புஷ்டியாமென்றும் சொன்னால், அவ்வார்த்தையை உண்மையென்று நம்பி விலை கொடுத்து வாங்கி மோசம்போகும் சாதுக்கள் எத்தனைபேர்? இதைவிட காவேரிஜலத்தை ஒரு பைஸாகூட செலவின்றி வேண்டியமட்டும் அள்ளிக் குடிக்கலாம். அதற்கு விலையில்லை. வி. பி. தபாற்செலவில்லை. கார்க்கில்லை. புட்டி கிரயமுமில்லை. ஏமாற வேண்டிய அவசியமுமில்லை.

10. வியசனப்படுகிறவனைத் தவிர மற்ற எல்லோரும் வியஸனத்தை ஜெயிக்கக்கூடும் என்று ஷேக்ஸ்பியர் கூறியிருக்கிறார். இதன் தாத்பரியம் யாது? வியஸனப்படுகிற ஒரு மனிதனுக்குத் தைரியம் சொல்லித் தேற்ற அநேக மனிதர்கள் தோன்றுவர். ஆயினும் அவரவர்க்கு வியஸனமுண்டானால் அடக்கிக்கொள்வது அரிது என்பதே.

11. வேஷக்காரர்களான வைதீகர்கட்கும் மற்றவர்கட்கும் பணத்தைக் கொடுத்து நற்கதி பெறலாமென்பது மதியீனம். பிறர் பொருளை அபகரிப்பதிலேயே ஸதா மனதைச்செலுத்தும் வைதீக வேஷதாரிகள் பலருளர். இவர்களுடைய பசப்பு வார்த்தைகட்கேனும், அவர்கள் கூறும் தர்மசாஸ்திரத்திற்கேனும் புத்திமான்கள் பயப்படலாகாது.

12. **பந்துக்கள்** நம்மிடம் வருவதெல்லாம் தங்களுடைய ஸ்வய நன்மையைக் கோரியேயன்றி நமக்கு ஹிதஞ்செய்ய வன்று. நம்மிடமிருந்து ஒரு ரூபா தானம் வாங்கியவனிடம் தக்ஷணமே நாம் காலணா கடனாகக் கேட்டாலும் கிடைக்காது. நம்மிடம் பக்ஷணம் வாங்கிக்கொண்ட குழந்தைகூட நம்மிடம் அதிற் சிறிது பாகமும் கொடாது. உலகின்போக்கே இது.

13. ஸக்திக்கு மிஞ்சின தர்மமாவது கர்மமாவது செய்யும்படி கடவுள் கட்டளை யிடவில்லை. மாமரம் பூ பூக்கும்போதே

அதை மனிதர் சுற்றிக்கொள்வர். அது பிஞ்சுவிட்டால் அப்பிஞ்சுகளைப் பறிக்க எண்ணுவர். அதற்கும் தப்பிக் காயானல் அதைப் பறித்து ஊறுகாய்போட எத்தனிப்பர். அதற்கும் தப்பிப் பழமானல் அப்போதும் மனிதர்களாகிய சத்துருக்கள் அதை விடுவதில்லை. இதைப்போல் பிறரிடமுள்ள பொருளை அபகரிக்க-திருடரேயன்றி, பந்துக்கள், அந்நியர், அயலார் முதலிய எல்லோரும் காத்திருப்பர்.

14. சிஷ்யன்:—ஐயா, மனிதன் ஆதிகாலத்தில் நாகரீகமில்லாத மிருகம் போலிருந்தான் என்கிறார்களே அது உண்மையா? குரு:—அப்பா, ஆதிகாலத்து மனிதனை எனக்குத்தெரியாது. தற்காலத்தில் வண்டி பாஸான 10-நிமிஷங் கழித்து தலைவிரிகோலமாய் பரக்கப்பரக்க ஸ்டேஷனுக்கு ஓடிவந்து, போய்க்கொண்டிருக்கிற வண்டியைப் பார்த்துப் பசபசவென்று விழித்துப் பெருமூச்சு விடுகிறவர்கள் அப்படித்தானிருக்கிறார்கள்.

15. மனிதர்களில் தெய்வ நிந்தை செய்வோர் அநேகர் உளர். இவர்களுடைய நிந்தை மொழிகள் காதில் விழாதபடி தெய்வம் கற்சிலையா யிருக்கிறதாம். பக்தர்கள் எத்தனை உருக்கத்தோடும் ஸ்தோத்திரம் செய்தாலும் தெய்வம் வாய் திறப்பதில்லை. ஏனெனில் துஷ்டர்கள் அதிகமாய் நிந்திக்கத் தொடங்குவரென்று மௌனம் சாதிக்கிறதாம்.

16. புலி, கரடி, கோனாய்களைத் துரத்திவிட்டோம். நமக்கு வேண்டாமற்போனல், ஆடு மாடுகளைக்கூட நாம் இப்படித்தான் அடித்துத் துரத்திவிட்டிருப்போம். எனவே நாம் அந்த ஜீவஜெந்துக்களை வைத்து ஆதரிப்பதெல்லாம் நம்முடைய சவுக்கியத்துக்காகவே யொழிய அவற்றினிடத்தில் தயவினலன்று.

17. உலகப் பழக்கத்தால் உண்டாகும் அறிவுக்கும், புஸ்தகங்களைப் படிப்பதனல் உண்டாகும் அறிவுக்கும் பேதமுண்டு. பழக்க அறிவே பெரிது.

18. நமது சுவாசக் குழாய்க்குள் நன்றாய் இறுக்கிக் கட்டிய தந்திக்கம்பி போன்ற ஒருவிதக் கருவியுண்டு. அது நாம் பேசத் தொடங்கும்போது நமது முயற்சியால் உள்ளிருந்து எழுகின்ற வாயுவினல், வீணைக்கம்பி ஆடுவதுபோல் ஆட்டப்படுகின்றது.

அதனாலேதான் நமது வாக்கினின்றும் ஒலி உண்டாகின்றது. உதடு நாக்கு முதலிய கருவிகளின் துணையால் அந்த ஒலி வெவ்வேறெழுத்து வடிவமாக வெளிப்படுகின்றது.

19. ஒரு மனுஷ்யனுடைய ஸன்மார்க்கத்தை யறிய அவனது யௌவன பருவமே தக்கது. குணத்தை யறிவதற்கு விவாக நிகழ்ச்சி ஏற்றது. விவாகத்திற்கு முன் இருந்ததுபோல் பிறகும் அமரிக்கையாய் நடபுடல் செய்யாமல் இருக்கிறானென்றும் சோதிக்கலாம்.

20. விவேகத்தை லோகாநுபவத்துடன் கலந்து விநோதமாக்கிக் கொடுப்பதற்கே விகடம்—என்பர். அந்த எல்லை மீறின் ஆபாஸத்தில் முடியும். அதற்குக் கில்லாடித்தனம் என்பர்.

21. ஒருவரிடம் பணம் தந்து ரசீது பெறுகையில்—இன்னாரிடமிருந்து 10-ரூபா பெற்றுக்கொண்டேன்—என்று மட்டும் எழுதி வாங்குவது போதாது. இனி செய்யப்போகும் இன்ன காரியத்துக்காக—என்ற விவரமும் காட்டி எழுதி வாங்கவேண்டும்.

22. வியாபாரிகள் தமக்கு வரும் கடிதங்களை,—அதில் ஏதாவது வி. பி. யில் அனுப்பும்படி கண்டிருக்கிறதா,—என்பதைமட்டும் மேல்பார்வையாக முதலில் ஒரு பார்வை பார்த்து விடுகிறார்கள். பிறகுதான் அக்கடிதங்களை முற்றிலும் வாசிக்கத் தொடங்குகின்றனர்.

23. படியாத பெண்ணுக்கு அவள் என்றும், படித்த பெண்ணுக்கு அவர் என்றும் லோக மரியாதை.

24. புருஷன் மனைவி—இவ்விருவருக்குள்ளும் எத்துணையோ ஸ்வாரஸ்யமான அநுபவங்களும் ரகசியங்களும் ஆயிரத்தெட்டு இருக்கும். அதை வெளியில் சொல்லிக்கொள்ள இவ்விருவராலுமே முடியாது. நாணம் நடுவே வந்து தடுக்கும்.

25. ஒரு பெண் தனது மகளை, தன்னிலும் வயதிற் பெரியவனுக்குத் தந்து அவனது மாமியாகி விடுகிறாள். இவ்விதமே வயதில் தனக்குச் சிறிய பெண்ணாயினும் அவனது தந்தை அவளை மணப்பாளாயின், அவள் அவனுக்கு மாற்றாந்தாயாகி விடுகிறாள். பெண்களுக்கு வயது பேதமில்லை.

26. ஒரு தாசியின் வீட்டிற்கு ஒருவன் தடபுடலாய்ச் செல்ல, அவனைப்பற்றி அத்தாசி அச்சமயம் உயர்வான எண்ணங் கொண்டாள். அத்தாசியே இவனது வீடு தேடி வந்தபோது இவன் சாதாரண உடையுடன் இருக்கவே,—சீ இவன் சங்கதி இவ்வளவு கேவலத்திலா,—என்று தன்னில் குறைத்துக் கொண்டாள். மனைவியாயிருப்பின் இவ்விதம் எண்ணுவாளா ?

27. உனக்கு வரும் கடிதங்களை யெல்லாம் சேர்த்துவை. அது ஒரு காலத்திற்கு உதவும். கடிதங்களைப் பத்திரப்படுத்துகிறவனுக்கு—நீ கடிதங்கள் எழுதுகிறபோது—பின்னுக்கு அவனுக்கு ஆதாரவாய் விடும்படியாக—ஒன்றும் நீ எழுதி விடாதபடி ஜாக்கிரதையிலிரு.

28. ஒரு கிரந்தகர்த்தா ஏதேதோ ஞாபகக் குறிப்பாக—காகிதத்தில் மனம் போனபடி கிறுக்கி வைக்கிறார். அக்குறிப்புகள் அவருக்கு லக்ஷம் ரூபாய் போலவும், மற்றவர்களுக்கு அது பைத்தியக்காரன் செய்கை போன்றும் தோற்றும். அக்குறிப்புகளை மற்றவர்கள் படிக்க முயன்றாலும் விளங்கா. நாள்பட்டு விடின் சில குறிப்புகளின் பொருள் கிரந்த கர்த்தாவுக்கே மறதியாய் விடுகிறது !

29. இலையில் உள்ள ருசிகரமான பதார்த்தத்தைக் கடைசியில் சுவைத்துப் பார்க்க நினைத்து, மற்றவைகளை முதலில் புசிப்பது சிலரது போக்கு.

30. கோபத்துடனும் ஆத்திரத்தோடும் ஒருவருக்கு ஒரு கடிதம் வரைந்தால், அதை உடனே அவருக்கு அனுப்பாமல் இரண்டு தினங்கள்போல் பெட்டியிலேயே வைத்திரு. பிறகு நீயே அதிலுள்ள கடின பதங்களை அகற்றி வேறொரு நிருபம் எழுத முற்படுவாய். 'நாள் செய்வது நல்லோர் செய்யார்.'

31. ஒரு கயிற்றுச் சிக்கலானது ஒரு குடும்ப கலகத்தைப் போலிருக்கிறது. எப்படி சிக்கெடுப்பினும் ஒரு கயிறு அறுந்து விடுகிறது. குடும்ப கலகத்தில் ஒருவர் தனிக்குடித்தனமாய் வேறாக எவ்விதத்திலும் பிரிந்துவிட நேரிடுகிறது.

32. பாசாங்குக்காரர்களுக்குத் தான் எல்லா மரியாதையும் நடக்கின்றன. கபடற்ற வெள்ளை மனத்தினனுக்கு எச்சிலை

கூடக் கிடைப்பதில்லை. காலத்தின் போக்கு அவ்விதம் இருக்கிறது.

33. தமிழில் அவ்வளவு வராது—இங்கிலீஷில்தான் அதிகப் பழக்கம்—என்று சிலர் கூறுவதானது—“ இந்த ஊரில் எல்லோரையும் தெரியும்—என் தகப்பனாரைத் தவிர—என்று சொல்வதுபோலிருக்கிறது.

34. உத்தியோக பதவியிலிருந்து அந்தப் பெருமையில் பேசுமொருவன், தன் வீட்டில் வேறு நிலையில் இருந்துகொண்டு பேசும்போது பேதப்படுவானென்பது பலகாலும் நிச்சயம்.

35. தனக்கு மனமில்லையானாலும் தன் எஜமானனைப் புகழ வேண்டுமென்றெண்ணுவது சில கபடிகளின் எண்ணம். (2) வைத்தியனுக்குப் பணத்தைக் கொடுத்து அருவருப்பான மருந்து வாங்குவதைப் பார்க்கிலும், வயல்களில் அலைந்து திரிந்து, பணச்செலவின்றி சரீர சுகத்தை ஸம்பாதிக்கலா மென்கிறார் ஒருவர்.

36. பித்தளை, செம்பு சாமான்களை வெகு உறுதியுள்ளதாகப் பார்த்து வாங்குகிறோம். அந்த சாமான்கள் இருக்கும் வரையில் நாமென்ன இருக்கப் போகிறோமா ?

37. எவ்வளவு எண்ணெய், எவ்வளவு சீயக்காய், இவ்வளவும் போட்டுத் தேய்த்துப் பளபளப்பேற்றுகிற இந்த மேனி - தேகம் - கடைசியில் மண்ணில்தானே கிடத்தப்படுகிறது ! ஸ்நானம் செய்கையில் இதை நினைப்பின், அது மனதில் ஆழத்தே சென்று தைக்கும்.

38. தனியே பிரயாணம் செய்பவர்களுக்கு எப்படியோ துணைவர்கள் வந்து கூடிவிடுகிறார்கள். வழியில் இடையே நேரும் அபாயங்கட்கு தந்தை தாய் சுற்றம் - அவனுக்கு - அவர்களே !

39. விவாகமற்ற யௌவனஸ்தரின் வாசகம் அதிக நம்பிக்கை பெறாது. அவன் ரகசியத்தில் எவ்வளவுக்கு வழி தவறினவனோ ? வெளிவகையில்மட்டும் யாவரும் பரம சாதுக்கள்தான். விஸ்வாசக் கொக்குகள்தான் !

40. உப்பில்லாப் பத்தியம் இருப்பவன் உப்பையே பிரமாதமாக நினைத்து ஏங்குகிறான். அந்தப் பத்தியமில்லாதோர்க்கு -

உப்பு - சாதாரண பொருளாகவே தோன்றுகிறது. அவ்விதமே விவாகமாகாதவன் அதைப் பற்றிப் பிரமாதமாக நினைக்க, விவாகமானவனுக்கோ - அது ஒரு சாமான்யம்போல் காண்கிறது.

41. இங்கிலீஷ் பாஷையிலே ஒரு பெரிய கவிராயன் - ஸங்கீத ஞானமில்லாதவரைக் கள்ளரென்றும் குறும்பரென்றும் சொல்லிப் பழிக்கிறான்.

42. எவ்வளவோ பிரியத்துடனும் ஒருவன் தான் செய்து கொண்ட பவுன் மோதிரத்தை தன் உடன் பிறந்த தங்கை கேட்க, சந்தோஷத்தோடும் தன் தங்கை தானே என்று அவளுக்குக் கொடுத்துவிட்டான். அவள் புருஷனோ அதை விற்று தனக்கு வேண்டிய உடுப்புகளை வாங்கிக்கொண்டுவிட்டான். பெண்களுக்குப் போடுகிற தாய்வீட்டு நகை எப்படிப்போகிறது பாருங்கள்!

43. ஒருவன் தன் குமாரத்தியின் மரணத்தை நினைத்து வியாகூலமாக, அவனது சிறிய தந்தை - "அவள் போனதென்ன பிரமாதம்? என் மகன் போனதைவிடவா" - என்று குறைத்துப் பேசினான். மற்றவர்கள் படும் துயரத்தை இளப்பமாகப் பேசுவது சில மவுடீகர்களின் வழக்கம்.

44. சில தாய்மார் தமது பெண்களை ஆகாசத்தில் உயர்த்திப் பேசுவர். ஆ! அவள் சொன்னாள் - அவள் சொல்லுறா - அவளுக்கு மேலேயே மற்றவர்கள் - என்று தமது குமாரத்தியின் பேச்சை சிலாகிப்பர்.

45. தாங்களென்னவோ குழந்தைகளை வளர்ப்பதில் மகா புத்திசாலிகள்போலக் காண்பித்துக்கொண்டு, - அதிக ஆரவாரத்துடன் ஊராரின் குழந்தைகளை வெகுவாகக் கண்டித்து - இவ்வளவு சேஷ்டையா - என்று சிடு சிடுக்கிறார்கள் சிலபேர்! ஆனால் அவர்களுடைய குழந்தைகளோ துஷ்டத்தனம் குடி முதலியவற்றில் முதல் நெம்பராயும். நுனி மரத்திலிருந்து அடிமரத்தை வெட்டும் புத்திசாலிகளாயு மிருக்கின்றன!

46. ஒரு விவாகத்தின்போது தாயற்ற ஒரு சிறு பெண் தனக்குப் பாடத் தெரியாதென, - அதற்காக நடுவிலொருவன் எழுந்து அவள் கன்னத்தைப் பிடித்துத் திருகவே அப்பெண்

கதறினள். அவளது மாற்றாந்தாய் மவுனமாக இருந்துவிட்டனள். இவளுடைய குழந்தையை அப்படித் திருகி இருந்தால் சும்மா இருப்பாளா ? - மனம் பொறுப்பாளா ?

47. தாயற்ற சேய்கள் பிறரிடம் சிக்கிக்கொண்டு படும் துயரம் நோக்கில், நல்லதங்காளின் செய்கை சிலாக்கியமே. தனக்குப் பிறகு தன் குழந்தைகள் கஷ்டப்படக் கூடாதென்ற அவளது எண்ணமும் உலக அநுபவத்தில் சரியாகத்தான் இருக்கிறது.

48. உன் மாற்றாந்தாய் பெற்ற பெண்களை உனது சொந்த தங்கைகள் என்று நீ வீணில் மயங்குகிறாய். - "நீயும் இத்தனை வாழ்வில் இருக்கிறாயா ? - " என்று பொறாமைப்படுகிறார்களே தவிர சந்தோஷப்படவில்லையப்பா ! உன் சொந்த தாயாயிருந்தால் உன்னைக் கேட்காமல் தன் பெண்ணுக்கு விவாக நிச்சயார்த்தம் செய்திருப்பாளா ?

49. பிராணன் இழுத்துக்கொண்டு நிற்கிறது. இந்த நிமிஷமோ அடுத்த நிமிஷமோ ! அச்சமயம் பந்துவான ஒரு அம்மாள் தனது நாயகனைப்பார்த்து - "எப்படி யிருக்குமோ என்னவோ - நீங்கள் சீக்கிரம் சாப்பிட்டு விடுங்கள் - குழந்தையையும் மறைவாகச் சாப்பிடச்செய்யுங்கள் - என்று குசு குசு வெனக்கூறுகிறாள். பந்துக்கள் காட்டுகிற துக்க நடிப்பு எப்படி யிருக்கிறது - கவனித்தீர்களா ?

50. எத்தனை தினங்களிருந்து சாப்பிட்டாலும் மனதிலே விஸ்வாசமற்ற உறவினருக்குப் போடுகிற அன்னத்தை அன்னியர்களுக்கு - நேசர்களுக்குப் போடுகிறது உத்தமம் என்று அநுபவம் கூறுகிறது.

51. நூறு நூறாகச் சிலபேர் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். ஆனால் அவர்களது மனைவியின் கழுத்தில் ஒரு நகையும் காணபதில்லை. பெட்டியிலோ ஒரு பணமும் நிற்பதில்லை. போதாக் குறைக்குக் கடனும் வேறே!

52. குடிக்கும்படி··தான் வற்புறுத்தியும் மற்றவன் மதுவில் வெறுப்புள்ளவனாய் இருந்தால் அக்குடிகாரனே அவனைப்பற்றி மேன்மையான எண்ணம் வைக்கிறான். இவ்விதமே வேசிக்கள்

வனும் தனது தீய வழியில் ஒருவனை இழுத்து அவன் உடன்படா திருந்தால் அவனை மனதிற்குள் மிகவும் மெச்சுகிறான் இவ்வா ருகவே பெண்களும் பேண்ணாசையை உண்மையில் துறந்த பெ ரியோர்களிடத்து அதிக கௌரவம் வைத்து வணங்குகின்றனர்.

53. சில டாக்டர்கள், சர்ஜன்கள், திரசர்கள் தங்களை ஆ க்ாசத்திலிருந்தும் குதித்தவர்கள் போலெண்ணி அவதார மூர்த்தி களாகப் பாவித்துக் கொள்கிறார்கள். நோயாளிகளிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை! உயிர் போகும் சமயத்தில்கூட தங் கள் பீஸ் பணத்தை வாங்கத் தவறுகிறதில்லை. கடைசியில் இந்த அக்கிரமஸ்தர்களையும் மரணதூதன் அழைத்தே தீருகிறான்.

54. ஒருவனுடைய செய்கையின் குணத்தை அவனுடைய உட்கருத்தைக் கொண்டு தீர்மானம் செய்யவேண்டும். அவன் நமக்கு செய்யும் புது உபசரிப்பு ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டுதானிருக்கும்.

55. ஒரு காலத்தில் ஒருமிக்கப் பலர் சேர்ந்து எத்தனை யோ பாசத்தோடும் பொட்டகிராப் எடுத்துக்கொள்கின்றோம். பிற்காலத்தில் அந்தப் பலருக்குள் எத்தனைபேர் நமக்கு அநுகூல சத்துருக்களாகிறார்களோ!

56. கூடப்பிறந்தால்தானா உடன்பிறப்பு? தூரப்பிறந்தால் இல்லையா? நினையாத விதமாய் பகவத் ஸங்கல்பத்தால் தூரப் பிறப்போடு உடன்பிறப்பின் பாசம் வைத்தால்-அதைக் காணச் சிலருக்குப் பொறுப்பதில்லை. அதை நம்புவதுமில்லை-ஏனோ?

57. நேசம் என்ற பதம் அநுபவிக்க நினைப்போருக்கு அது சக்கரைக் கட்டி - இனிப்பு. அநுபவித்தவர்க்கோ அது கசப்பே! பிராண சிநேகிதர்கள் சீக்கிரத்தில் மாண்டுவிடுகின்றனர் - அல் லது தூரத்திலிருக்கின்றனர். சத்துருக்கள், போலி நட்பினர்- விஸ்வாசக் கொக்குகள் - நய வஞ்சக உறவினர் - இவர்களோ நமது வீட்டண்டை வாசம்!

58. மனிதன் எல்லாவற்றையும் பார்க்கிறான். ஆனால் தன் சவத்தின் அலங்காரத்தையும், தன்மீது பாடும் சரம கவிகளையும், தனக்குப்பின் தன் சொத்துகள்-அலங்கோலமாவதையும், கோர்ட் டேறுவதையும் பார்ப்பதில்லை!

59. தெரியாத்தனமாய் அணைகடந்த பிரியத்தை வைத்து விட்டு இப்போது நான் படும்பாடு போதாதா? இனிப் புதிதாக வேறொருவரிடத்தில் இந்தப் பிரியம் வைக்கவும் வேண்டாம். இந்தப் பாடு படவும் வேண்டாம் - என்றான் ஒருவன்.

60. நமது உயிரை நமது கையாலும் மற்றவர் கையாலும் பிடிக்க முடியாது. எந்தெந்த நேரத்தில் எவ்விதம் கஷ்டப்பட வேண்டுமோ அதெல்லாம் நினையா வண்ணம் வந்து சேர்ந்துவிடு கிறது!

61. தனக்கு நெருங்கியவர்கள் ஊருக்குப் போக வண்டி யேறும் சமயம் ஒரு பெண் அழ - அது அவசகுனம் - என்று பொறுமை உள்ளத்தோடு கடிந்தாள் ஓர் மாமி. இந்த மாமியின் குமாரத்திக்கு விவாகமாகி கணவன் வீடு செல்கையில் - அப்பிரிவுக்கு இம்மாமி வருந்துவாளா? - அல்லது பல்லிளிப்பாளா?

62. இப்பிறப்பில் நேர்வன, தொடர்வன, சூழ்வன யாவும் முற்பிறப்புச் சம்பந்தமே - செயலே!

63. கையில் ஒரு காசுகூட வைக்காமல் இன்று செலவிட்டு விட்டால் நாளைக்கு எங்கிருந்தாவது பணம் வந்துவிடுமென்பது தமது 13-வருஷத்து அநுபவமென்கிறார் ஒருவர். கடவுள் படியளக்கிறாரென்பதே அவர் எண்ணம்.

64. தன்னவர்களுக்கென்று ஆயிரம் செலவிட்டாலும்-அது செலவிட்டதுபோலாவது. நஷ்டமானதுபோலாவது தோன்றுவதில்லை. பிறருக்கு-என்றால் அதற்கு ஒரு கணக்கு ஏற்படுகிறது.

65. நீ திட்டி என்ன செய்ய? அவர்கள் காதில் உன் திட்டுகள் விழுந்தாலன்றோ உன் மனது திருப்தி தரும், சும்மா அவர்களறியாது அவர்களைத் திட்டி லாபம் யாது?—என்றாள் தன் புருஷனைப் பார்த்து ஒரு பெண்!

66. கிளியைக் கூண்டிலிட்டு வளர்க்கும் காக்ஷியிலும், ஸ்வயேச்சையாக ஸ்வதந்திரத்துடனும் அது தன் காதலியோடும் இரை தேடியுண்ணும் காக்ஷியைக் காணல் சாலவும் இனிது.

67. ஒருவர் வீட்டில் சாப்பிடுகையில் அந்த தின்ற சோற்றுக்காக - ஊர்விஷயங்களை இழுத்து - அங்கே பெண்ணிருக்கிறதே - இங்கே பெண்ணிருக்கே-வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்களே-

என்று பேசுதலும், தங்களை அவ்வீட்டினருக்கு நிரம்பவும் வேண்டியவர்கள்போல் அந்யோன்னியம் காண்பித்துக் கொள்ளுதலும் - சிலரது சுபாவம்.

68. உலக வாழ்க்கையில் பணக்கஷ்டம் எவ்வளவிருக்கிறதென்பதை பாங்கி (Bank) க்குப்போய் பார்த்தால் தெரியும். மாங்கல்யம் நீங்கலாக - எல்லா நகைகளும் பாங்கிக்கு ஓடுகின்றன.

69. ஒருவருக்குத் துரதிஷ்டம் நேர்ந்துவிடின், அதுபற்றி முன்பு அவர்கள் செய்துள்ள தீங்குகளை மறக்கும்படியாகிறது.

70. பெண் கருப்பாயிருந்தாலும் - பழகிப்போன பிறகு, இரண்டொரு குழந்தைகட்கும் அவள் தாயான பின்பு, அவள் புருஷனுக்கு அவள் ஸ்வர்ணவிக்கிரகமே. அவள் பேச்சு கருடகம்பம்தான்!

71. குற்றமுள்ள ஒரு வியாசத்தை அன்னிய னொருவன் படிக்கும்போது - இன்னாரை அது குறிக்கிறதென்று கருதினால் - அது அவதூறாகும்.

72. பழமை என்ற ஒரே காரணத்தால் எல்லாம் நல்லதாய் விடாது. பழய மனிதர்கள் தான் தாங்கள் முதல் பாத்தியஸ்தனென்று வம்ஸாவளிஜாப்தா போட்டுக் கோர்ட்டில் தாக்கல்செய்து நமது சொத்துக்களுக்கு - நமக்குப் பிறகு - வழக்காட வருவர்.

73. சிற்றப்பன் மாற்றாந்தாயார் இவர்களுள் உத்தமர்கள் கிடைப்பது லக்ஷத்தில் எங்கேயோ!

74. உன்னையே நம்பி நிற்கும் உன் மனைவிக்கு - உன் காலத்திற்குப் பிறகு - உன் தாயாதிகளிடம் - ஏங்காதபடி - அவளுக்கு முதலில் தானே நல்ல ஏற்பாடு செய்துவை.

75. நான் வளர்த்த கண்ணே, நான் வளர்த்த கண்ணே என்று இறந்தவனைத் கொட்டுத் தொட்டு அழுவதும் - அந்த சவத்தை எடுத்துச் சென்ற பின்னர், அன்றைக்கே- அவன் ஆனுவத்திற்கு அப்படித்தான் வேண்டுமென்று வைவதும் சில பெண்களின் சுபாவம்.

76. சில மாற்றாந்தாய்மார் தாங்கள் தான் குடும்பத்தைத் தாங்கிவருவது போல, தமது மூத்தாள் மகனுக்குப் படச்செய்து, அவனை மட்டும் வெகுவாய் உபசரித்து அவனுக்கு மிகவும் வேண்

டியவர்கள் போல் காட்டி நேர்த்தியான நடிப்பு நடிக்கிறார்கள். உன்னுக்கோ அவன் மனைவியையே ஸகல வேலைகளையும் செலவுகளையும் செய்ய வைத்துவிட்டு, தாங்கள் எந்தவேலையும் செலவும் செய்யாமல், எதிலும் சம்பந்தப் பட்டுக் கொள்ளாமல் - எப்பொழுது எந்தக் கலகம் - மனஸ்தாபத்தைக் கொண்டு தாங்கள் பிரிந்துவிடலாமென்று - எதிர்பார்க்கிறவர்களாயும் — தங்களது காசு, பணம்- என்று வேறு கணக்கு வைத்துத் துட்டு சேர்ப்பவர்களாயும் - ரகசியத்தில் வட்டிக்கு விடுபவர்களாயும் இருக்கிறார்கள்.

77. உன் வீட்டிற்கு வந்ததும் ஒவ்வொரு சாமானுக்கு ஏதும் தெரியாதவர்கள் போல் ஆராய்கிற உன் உறவினர்களிடம்-இஷ்டர்களிடம்-நீ சிறிது அதிகமாகவே கண்ணைத் திறந்து கொண்டிரு. இந்த தடவையும் ஏதாவது சுற்றிக்கொண்டு போகக் கிடைக்காதா என்றே அவர்கள் உன் வீட்டுக்கு வருகிறார்கள்.

78. சுந்தரமான ஒரு கன்னிகை உல்லாஸமாக ஒரு ஈச்சேரியில் - எதிரில் ஒரு ஆடவன் வருவதை யறியாதவளாய் - சாய்ந்துகொண் டிருந்துவிட்டு - திடீரென்று அவனைக் கண்டதும் திடுக்கிட்ட நாணத்துடனும் அவசரமாய் எழுந்திருக்கும் காட்சி அபிநயம் மிக்க ஸ்வாரஸ்யமாய்த் தோன்று மென்றார் - ஒருவர்.

79. பத்திராதிபர் ஒருவனைப் பற்றி அநுகூலமாகவே எழுதவினைத்தும், அவரது பேனாவோ - அவனைப்பற்றிக் கண்டனமாக - எழுதி விடுகிறது. அந்தக் கண்டனம் தான் கடைசியில் அச்சுக்குப் போகிறது. பத்திராதிபர் பேசுவது ஒன்று - அவரது பேனா போவதொன்று.

80 கண்களில் தூசி விழாதிருக்க சில புமான்கள் கண்ணாடி யணிகின்றனர். இந்த அழகு வேலை - கடைசியில் கண்ணாடிபோட்டே வாசிக்கும்படி செய்து கண்ணைப் பொட்டையாக்கி விடுகிறது.

81. அதிக வியாதி, அபாயம் - என்று வெளியூரிலிருப்பவனுக்குத் தந்தியடித்து விட்டால், அவன் உடனே வீடு வந்து சேர்ந்து விடுவான். அவனைத் தருவிக்கத் தந்திரமான வழி இதுவே.

நொந்து போன நெஞ்சு.

நொந்துபோன நெஞ்சுக்கு, சென்றுபோன நாட்களை நினை ந்து நினைந்து *நைவதே தொழில். கொட்டாவியும், மனப்பதைப் பும், நெஞ்சுப் புண்ணின் வாதனைபும், பெருமூச்சும் பார்க்கப் பார்க் கப் பரிதாபமே. நன்றியே புரிந்து நலமே விளைத்த நல்லோனொ ருவன் நாலு திக்கிலும் தன்னன்றி மறந்தாரையே காண்கையில் அவன் உள்ளக் கொதிப்பு எத்தகைத்தோ! தன் ஸம்பாத்தியத்தை யெல்லாம் மிகவும் தனக்கு நெருங்கினுரென நம்பி, அவர்கட்கே செலவிட்டவன், அன்னோர் தன்னிடத்தே விஸ்வாசம் அற்பமே னும் இல்லாததை நினைக்கையில் அவன் சிந்தாகுலம் - வாழ்க்கை யின் ஏமாற்றம் - எண்ணவும் ஒண்ணுமோ ? உள்ளது உரியதெல் லாம் ஒருவனுக்கே ஈந்து, அந்த ஈகையின் மிகுதியே தன்னை வறு மையின் பாற் படுத்த, அத்தரித்த துன்பத்தில் தான் உழலும் வேளை - அந்நன்றி பெற்றவன் தன்னையே பெரும் பகைஞனாக மதித்து, தீர்க்க விரோதம் அவன் சாதிக்கும்போது - காலமுழு தும் அவ்வொருவனுக்கே உழைத்தார் தம் நெஞ்சு படும் பாட்டினை விவரிக்க எவர் தரம்? வெகு வேகத்துடனும் மிகு செழிப்புடனும் சென்று கொண்டிருந்த தனது ஜீவியம் இடையில் முறிந்து பிழை ப்பு மார்க்கம் தவறுமேல் அதனினும் பெரிதாய தவிப்பு-திகைப்பு- தடுமாற்றம்- ஞாலமீது வேறு யாதுளது?

தூரதேசத்தில் மிகு செல்வாக்கிலிருக்கும் நேசர்களை நம்பி நம்பி, நாளும் நாளும் எதிர் நோக்கி, அவர்களால் தன் வாழு ள் - ஜீவியம் - தான் எடுத்திருக்கும் தொழில் செம்மையுறும், முன்

---

* நைவல்—இரங்கல், தளர்தல், துக்கித்தல், வதங்கல், வருந்தல், வாடல்.

னேறும், சிறந்தோளிருமென நெஞ்சிலே ஆசைகள் பல கொண்ட குணசாலி யொருவன்,-அந்த அன்பர்கள் ஊர் வந்து சேர்ந்த பின்னர், தன்னைக் கண்டு அவர்கள் மெதுவாக ஒளிந்து, மறைந்து, அகல்வதைக் கருதுங்கால்,-தன் காரியாதிகளில் பட்டும்படாதவர்களுமாய் விலகுந் தன்மையராக அன்னுர் இருப்பதை நீள நினைக்கும் சந்தர்ப்பம், - கால முழுதும் அவர்களிடத்து ஆசை வைத்து அளப்பரிய மனோரதங்கள் கொண்டு - அவர்கள் தம்மை நம்பின அந்த உள்ளம் என்னவாய் வேகின்றதோ? இந்த மித்திரர்களை நம்பி நட்டாற்றில் இறங்கியதின் பின்னர் அவை மண் குதிரைகளெனத் தெரிந்து உண்மை இயல்பு விளங்குகிறபோது - அந்தப் பேதை படும் கலக்கம் - சோர்வு - கண்ணீர் - கொஞ்சமோ?

எவர்கள் தனக்குப் பிராண பதமானவர்கள், தன் வாழ்க்கையின் முடிவுக்குப் பின்னருங் கூடத் தனக்குத் துணைவர்கள் எனக்கருதினுனே, அவர்களெல்லாம் தன்னைக் கைவிட்டவர்களாய், அன்னியர்களிலும் கடைகெட்டவர்களாய்த் தன் கண் முன்பாகவே அவன் காண்கையில், அன்னுனின் எளிய நெஞ்சம் என்னதவிப்பு தவிக்கும்? இன்ன வகையில் தான் மனதைச் சமாதானம் செய்து கொள்கிறதென்று எவ்வழியும் காணுதலையுமன்றோ? விம்மி விம்மிப் பெருமூச்செரியுமல்லவோ! லோகசுபாவம், ஜனங்களின் மனச்சார்பு, உற்ருரின் பந்தத்துவ பாசம், நேசர்களின் உள்ளம் - இவை யெல்லாம் கள்ளம்போநுந்தி யிராதெனவும், நிஷ்கபடமானவை யெனவும், பரோபகாரச்சாயல் தத்துவம் கலந்தவை யெனவும் பேதமையால் மயங்கியிருந்து பின் அவ்வவற்றின் யதார்த்தம் வெளிப்படும்போது எத்துணைப் பெரியதோர் ஏமாற்றத்திற்கு அவன் ஆளாகின்ருன். அந்த நொந்துபோன நெஞ்சு அத்தருணம் படும் வாதனையை விவரித்தல் துயரப்பெருக்கே. "ஆற்றமாட்டாமல் அடித்துக்கொள்ளுதல்" என்ற வாசகமும் இதன் பொருட்டே தோன்றியது."

ஒருவன் தன் சொந்த தர்ம பத்தினியை விட்டு விட்டு, வேசி காந்தனுய் தாசியின் இல்லமேகதி யென்றிருக்கின்ருன். அவனின் சொந்தமனைவி நொந்துபோன நெஞ்சுடன் தன் கணவனைங்

பற்றி அங்கங்கும் சொல்லிக்கொண்டு அங்கலாய்க்கிருள். அவளைப் பிறர் கண்டு இவள் ஆற்றமாட்டாமல் அடித்துக்கொள்ளுகிருள் - என்கிருர்கள். இது ஒரு ஆற்றமாட்டாதது ஒரு மூட மைந்தன் தாயைக் கஞ்சிக்கு அழச்செய்து தாசி வேசிகளுக்குச் செலவிட்டுத் திரிகிருன். அவன் ஏதோ ஒரு அவதியில் அகப்பட்டுக்கொண்டபொழுது— அதுகாறும் அவனிடத்துத் தின்று சுகித்த தாசி வேசிகள் மறைந்து கொள்ள—பெற்ற தாய் அவனுக்காகப் பரிதபிக்கிருள். அவளைப்பார்த்து சிலர் - இவள் ஆற்றமாட்டாமல் அடித்துக்கொள்ளுகிருள் - என்கிருர்கள். நடை தப்பான ஒரு மாது தன்னை மாலையிட்ட மணாளனை மறந்து அவனை முற்றும் வெறுத்து பர புருஷனொருவனோடு அன்பு குலாவுகிருள். அவளது சொந்த கணவனோ, அவளே கியானமாக - கினைவாக - பேதை போல் புலம்பித் திரிகிருன். அந்த நொந்துபோன நெஞ்சினனைப் பார்த்ததும் - இவன் ஆற்றமாட்டாதவன் - என்கிருர்கள். கண்ணைனத்தகுமொரு பெண்மணிதானே உழைத்து தன் தடிமாடான புருஷனுக்கு சாப்பாடு போட்டுக்கொண்டு வந்தும், அவன் தெண்டச்சோறு உண்ணுவதோடு கூட, அவளை அடித்தும், உதைத்தும், - ஒரு பெண்ணுக்கு இத்தனை ஆணவமோ, - வென்று மனம்போனபடி ஏசியும் அதிகாரங் காட்டிக்கொண்டிருக்க, அவளோ அவனை விடேனென்று ஊட்டி வூட்டி வளர்க்கிருள். அவளைப் பார்க்கிறவர்களும் - இவள் ஆற்றமாட்டாதவள் - என்கிருர்கள்.

ஒரு மந்தப் பிறவியாகிய பையனுக்கு அவன் தந்தை எவ்வளவோ பணத்தைச் செலவிட்டு படிப்பு கற்றுக் கொடுக்கப் பிரயாசைப்படுகிருன். பையனுக்கு படிப்பு என்கிற வாசனையே வரவில்லை. பரம நிரக்ஷரகுக்ஷி. பிதாவோ பெரிதும் துயருற்று நொந்துபோன நெஞ்சினனுகின்றன். அந்தத் தந்தையைப்பார்த்து இவன் ஆற்றமாட்டாதவன் - என்கிருர்கள். ஒருவன் கோயில் குளம் சபை முதலான பொதுநல உழைப்பில் பெரியதனம் பாராட்டியிருந்து, எவ்விதமோ தப்பு நடத்தை நடத்தி விடுகிருன். அவனைப் பலராது தீர்மானத்தால் அந்தப் பதவியிலிருந்தும் நீக்கி விடுகிருர்கள். அவன் அதற்காகப் பெரும் பெரும் வம்பு வழக்குகளை

யெல்லாம் தொடுத்துக்கொண்டு, மீண்டும் அப்பதவியைப் பெற விரும்பித்திரிகிறான். அவனைப் பார்த்து - இவன் ஆற்றமாட்டாதவன் - என்கிறார்கள். ஒருவன் கவர்ண்மெண்ட் - மற்றுமான அலுவல்களில் - உண்மையான பெரிய மோசத்தை நடத்திவிடுகிறான். அதைத் தெரிந்து அவனுக்குப் பென்ஷன் முதலான யாதொன்று மின்றி உத்தியோகத்திலிருந்து அவனை நீக்கி விடுகிறார்கள். அவன் இதில் தப்பித்ததே போதுமென்றிராமல், அதற்காகப் பிரம்ம பிரயத்தனங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு தன்னை மறுபடியும் உண்மையானவனாய் ஆக்கிக்கொள்ளப் பார்க்கிறான். அவனையும் - இவன் ஆற்றமாட்டாது அலைகிறான் - என்கிறார்கள். ஒருவன் ஒரு காரியத்தில் பிரவேசித்து, அதை நிகழ்த்து கையில் அது தப்பித்தப்பித் தவறித்தவறிப்போயும், அல்லது தன்னாலேயே அது தப்பு மார்க்கமாய் நடந்துபோயும், அல்லது ஆகவே ஆகாது என்று தெரிந்தும், அந்தத் தப்பிலிருந்தும் தன்னை மெதுவாக விடுவித்துக்கொள்ள இல்லாத பொல்லாத கஷ்டங்களும் எண்ணற்ற முயற்சிகளும் எடுத்துக்கொண்டு அவதிப்படுகிறான். அதனால் பல வகையாலும் அவன் நெஞ்சு நொந்து போகின்றது. அவனையும் - இவனொரு ஆற்றமாட்டாதவன் - என்று சொல்லலாமன்றோ?

ஆற்றமாட்டாமல் அடித்துக்கொள்ளுதலுக்கும், நொந்து போன நெஞ்சுக்கும் உள்ள ஒற்றுமை பாலும் நீரும் போன்றது. நெடுந்தூரத்தே இருந்து - அப்போது பிறந்த குழந்தையைப் பார்க்க வந்த - ஒரு மாது நல்லாள், தன் கண் முன்பாக அக்குழவி பிணியுண்டு உயிர்மாள - அது சகியாது அவள் நெஞ்சு நொந்து போக, - இறந்துவிட்ட அக்குழந்தையைப் பார்த்துப் பார்த்து தன் மார்பில் படபடவென்று கைசலிக்குமட்டும் அடித்துக்கொள்கிறாள். இவ்விதம் அடித்துக்கொள்வது ஆற்றமாட்டாமல் தானே! துக்கமும் சோதனையும் கண்ணீருமாயது இவ்வுலகு. அதனில் நொந்துபோன நெஞ்சு பல்கோடி. யாவும் அவன் செயல்!

தித்திக்கும் நூதனநூல்! வி. பி. யில் விலை ரூ 1-3-0.

கதாமோஹனரஞ்சிதம்

ஓர் அபூர்வ கதா நூல்

சுவை ததும்பிய கதைகளும் நாவல்களும் கொண்டது.

"பிரஜாநுகூலன்" பத்திராதிபரவர்கள் நவீனமாக இயற்றியது.

இக்கதா நூலின் விஷய அட்டவணை.

---

1 நளகீர்த்தி.
2 நான்கு சங்கீத ரஸிகர்கள்.
3 கதவு சாத்து.
4 நிவேதிதா.
5 கர்ண - துரியோதனன்.
6 சிரிக்கச்செய்யும் சிங்காரம்.
7 குடித்தன ரீதி.
8 நீதிகள்.
9 ஸ்வர்ணகுமாரி.
10 மூன்று நண்பர்கள்.
11 பேரின்பம் தேவிட்டுமோ?
12 கழுதை மனிதனாவனா?
13 ஒரு சக்கரவர்த்தியும் பாலனும்.
14 குண்டூசியில் கோபுர வாழ்வு.
15 ஓர் இளைஞனின் மாதா.
16 காணாமற்போன குமார்.
17 பத்மாவதியின் தடுமாற்றம்.
18 கானோஜ் இராஜகுமாரி.
19 தொலைந்து போ!
20 ஒரு மனிதனின் சிறுமை.
21 இரு வைதீக மாதர்கள்.
22 ராமதாஸ் பந்துலு.
23 திருவாழ்த்தானின் வாக்கு.
24 ஸ்ரீமதி கனகவல்லி.
25 போடியின் பிரதாபம்.
26 மாதவன்.
27 மூன்று சாதுரியங்கள்.
28 ஹிதமே செய்வோம்.
29 பலதேசத்தார் வழக்கங்கள்.
30 ஓர் திருடனின் துறவு.
31 மாமனாரின் சாமர்த்தியம்.
32 ஒரு பிரபுவின் மனைவி.
33 பலவித மனிதர்கள்.
34 ஒரு நாவிதனின் காதல்.
35 வேடிக்கை விநோதங்கள்.
36 விடுகதைகளின் விநோதங்கள்.
37 தமிழாங்கில நேசர்கள். [பவம்
38 ஸ்ரீ காசிராமேஸ்வர யாத்திராநு
39 பார்லிமெண்ட் நிர்வாகம்.
40 இங்கிலாந்தில்இந்தியன்கக்ஷியார்
41 அந்தமான் தீவினரின் அதிசயம்
42 என் கிழத்தனத்தையடைகிறீர்
43 துண்டு துணுக்குகள். [கள்
44 இலக்கண ஞானம். [னங்கள்
45 ஒருஉத்தியோககனவானின் சகு
46 கார்படிகனின் வறுமை.
47 வீரவரனின் இராஜபக்தி.
48 சந்திரஸ்வாமியின் சாதுர்யம்.
49 தருணசந்திரனின் ஏமாற்றம்.
50 கனவோ! நினைவோ!
51 வீரநாட்டின் வாழ்த்து.
52 தேன்கூடு.
53 நாம் கண்ட அநுபவம்
54 ஷேக்ஸ்பியரது நடிப்பு.
55 தமிழ் மொழிபெயர்ப்பு.
56 பிதா பக்தி (கீதம்)
57 வீணுக்குப் பேசுவது.
58 உழைப்பின் நகரவாழ்க்கை.
59 குதிரை இரவல்!
60 சாமர்த்திய சிறுவர்கள் மூவர்
61 சூடாமணி.
62 இன்பதுன்ப சதிபதிகள்.
63 இருவேந்தர்களின் சமரஸம்.
64 விசாலாக்ஷியின் நாடக அவா
65 நரசிங்கராவின் நாகரீகம்.
66 ஒரு வைத்திய பண்டிதர்!
67 கணித விநோதங்கள்.
68 கைதேர்ந்த தீரன்.

எல்லாம் உலக அநுபவங்கள்! யாவும் ருசிகரமான குறிப்புகளே! வேடிக்கை விநோதங்கள், சிறுவர் சிறுமியர்க்கான விடுகதைகள், காதலர் கடிதங்கள், நாடக விசேஷங்கள், ஆசாரத்திருத்த தமாஷ்கள், நவீன ரஸிகர்களின் மனப்போக்குகள், கோணல்வழிகள், லோகரகஸியங்கள், பைத்திய பாஷைகள், வீரரஸ கீதங்கள்; தமிழ்ச்சுவை நிரம்பிய கதைகள், ஆங்கிலப் போக்கையொட்டிய சிறு சிறு நாவல்கள், இன்சுவை யூட்டும் துண்டு துணுக்குகள், தமிழறிவு, ஞானம், உலகநிலை, தேசரீதி, வலிமை, வாழ்க்கை, நேச ஸல்லாபங்கள்—இன்னோரன்ன பல்வகைத்தாய சேகரங்கள் இக் 'கதாமோஹனரஞ்சித''த்துள் நிறைந்து நிற்கின்றன. பார்க்க அழகாய், சொகுஸான பைண்டாய், வாசிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாய் படிப்பவர்க்கே உயர்வாய் ஒளிரும்.

1. தமிழ்ச்சுவை.

கதா மோஹன ரஞ்சிதம்:—தமிழ்ச்சுவை பெரிதும் கொண்டது. பலவித பாஷைகள் - எழுத்தியல் - சொல்லியல் - தொடர்பியல் - புணரியல் - பதவியல்-யாப்பியல்-அணியியல்-பொருளியல்-இரட்டைக்கிளவி-தொகைக் குறிப்பு - வெள்ளை, முதுகுவாக்கியம்-சங்கேதம்-பரியாயவணி-விசேஷவணி-முதல், வழி, சார்புநூல்கள்-அலங்காரம்-செய்யுள்-தமிழ், சமஸ்கிருத பதங்கள்-அகஸ்தியர், தொல்காப்பியர் - மங்கலம் - இடக்கரடக்கல்-ஆகுபெயர்-அன்மொழித்தொகை - உண்மைக்கு மிஞ்சி வர்ணித்தல் - இன்னும் அநேக அருமையான குறிப்புகளை உதகரித்திருக்கின்றோம்.

இவைகளை வாசித்தபின்பு இலக்கணநூல்களைக் கற்கப்புகின், அதில் சுவை தோன்றி மேன்மேலும் பயில்தற்கு அவா எழுதல்கூடும்.

2. வேடிக்கை விநோதங்கள்

கதா மோஹன ரஞ்சிதம் வேடிக்கை விநோதங்களில் வெகு விசேஷித்தது. சேவகனின் புகழ்ச்சி - ஒரு வைதீகரின் ரூபாய் - அக்காஆணை - எதுதரம்சொன்னே - உன் கண்ணாலம் - மொட்டை - ஒரு தையற்காரன் - பக்கத்து உளவு - லோபியின் கண்ணாடி - காதல் - பெரிய மனுஷ்யர் - ஸ்திரமான கோபம் - ஊமை - வேதாந்தம் - ஆடவர் சிந்தனை - கால்வாய் - பஞ்சபாத்திரம் - தானேசெய்தல் - அழுகை 5 ராஜ்யம் ஜெயிக்கும் - ஒரு லாயரின் உயில் - தூக்கு சிக்ஷையில் சுகம்-சோறளியாத புருடன்-பத்து பெரிய மனிதர்கள் - ஒரு ஹைகோர்ட் வக்கீல் - எது நல்லவேளை - ஒரு தாவா!—சப்திக்காத ரூபாய் - புதுவக்கீல் - தீய்ந்த ரொட்டி - சுருட்டு வர்த்தகன் - ஒரு கடன்காரன் - தன் சொம்பு - அடியிலே பால் - ஒரே பிடிவாதமா ?—பால்காரன் மகன் - ஒரு சீனதேசத்திருடன் - தாதமய்யங்கார் - மருந்தின் கசப்பு - மறுநாள் மிதத்தல் - கறுப்புக்குல்லா - இன்னும் அநேக விநோதங்கள் இதில் அடங்கியுள்ளன.

3. விடுகதைகளின் விநோதம்.

கதா மோஹன ரஞ்சிதத்தில் 66 விடுகதைகளைக் காணலாம். விடுவிப்புகளை மட்டும் கீழே தருகிறோம்.

1-விபூதிப்பழம், 2-குங்குமப்பூ, 3-நெருப்பு, 4-வாழையிலை, 5 - விளாங்காய், 6-புளியங்காய், 7-ஆமணக்கு, 8-குழி, 9-பலாப்பழம், 10-ஆகாசபாணம், 11-தோப்பரை, 12-ரஸ்தா, 13-இதழும் பல்லும், 14-பேச்சு, 15-எழுத்துகள், 16-சிட்டுக்கட்டு, 17-நரைமயிர், 18-அண்ணன், 19-நாக்கு, 20-பனைமரம், 21-உள்ளிப்பூண்டு, 22-கிணறு, 23-ஊசி, 24-தேள், 25-மனுஷ்யன்,

26-ஒரேபழம், 27-கொசு, 28-திண்ணை, 29-கிழிசல், 30-தபால்கடிதம், 31-புத்திமதி, 32-நாளைத்தினம், 33-மாதுரம், 34-வலை, 35-மூக்கு, 36-தேசபடம், 37-நிழல், 38-வியாஜ்யம், 39-கண்ணிமை, 40-மெழுகுவத்தி, 41-கண்ணாடி, 42-மூக்குச்சளி, 43-இருபத்திரண்டு, 44-தேன்கூடு, 45-கட்டில், 46-நக்ஷத்திரம், 47-பருத்திக்காய், 48-மத்தளம், 49 - கண்ணாடி, 50 - ஒன்றுமில்லை, 51-தோசை, 52-கால் கண் காது கை, 53-தென்னைமரம், 54-தேங்காய், 55-கிழல், 56-மழைத்துளி, 57-யந்திரம், 58-பாய், 59-தக்கை, 60-கண் 61-மூக்குக்கண்ணாடி, 62-கதிர், 63-நெற்பயிர், 64-சொக்காய், 65-பாம்பு, 66-ரூபாய், ஒவ்வொன்றும் வெகு நேர்த்தியாயிருக்கும்.

இப்புஸ்தகம் விரும்புவோர் உடனே எழுதிக்கொள்ளவும். சொற்ப காபிகளே கைவசம் உள்ளன. பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்திராமார்க்க விவரணம்.

இதுகாறும் வெளிப்படாத நூதன நூல்.

☞ ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் ரயில்மார்க்கம், வண்டிப்பாதை முதலிய விவரங்கள் வெகு தெளிவாய்க் காண்பிக்கப்பட்டு உயர்ந்த பதிப்பாய் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. வெகு அருமையான நூல். விலை அணு 5.

பிரஜாநுகூலன் பத்திராதிபர் தயாரித்தது ☜

(1) சப்தபுரிகள், முக்திநகர், (2) சுயமாக உண்டான ஸ்தலங்கள், (3) தேவர்கள், ரிஷிகளால், நியமிக்கப்பட்ட ஸ்தலங்கள், (4) புண்ணிய தீர்த்தங்கள், அதன் உற்பத்திஸ்தலம், அவற்றை எங்தெந்த இடத்திற் காணலாமென்பது, அதற்கு வழி, (5) மலைமேலுள்ள சன்னதிகளுக்கு வழி, (6) புராண ஸ்தலங்கள் 38 - க்கும் வழி, (7) திருப்பதிகள் 108 - க்கும் வழி விபரம், ரயில்பாதை, வண்டிப்பாதை, (8) திருப்பதிகளின்மீது மங்களாசாசனம் செய்த பாசுரங்களின் புதுவிதமான நூதன கணிதக் குறிப்பு. (9) யாத்திரைக் குறிப்புகள். இன்னும் அநேக முக்கியமான விஷயங்களும் அடங்கியது. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராதிபர்,

"பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம் திருச்சிணுப்பள்ளி.

எல்லோரும் வாங்துங்கள்! எல்லோரும் படியுங்கள்!

வருஷ சந்தா ரூ. 2.] எல்லோரும் களிகூறுங்கள்! [வெளிநாடு ரூ. 2-8-0

வேத முக்கியம்! வேத சிலாக்யம்!

பிரஜாநுகூலன்.

நாவல்களுடன் கூடிய ஒரு சிறந்த செந்தமிழ் மாதாந்தரப் பத்திரிகை.

1. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 40 பக்கங்களுடனும் 1904-ம் வருட முதற்கொண்டு எங்களால் வெகு அழகாயும் ஒழுங்காயும் புத்தகரூபமாய் நடைபெற்று வருகின்றது. உலகத்திலே பலவித போதனைகளில் அநுபவ

பூர்வமாய்ப் பிரதி விஷயங்களையும் எடுத்துப் பேசுதல் பொதுவாக எவருக்கும் அதிக கஷ்டசாத்தியம். இப்படி அநுபவங்களை எடுத்து விவரிப்பதில் அவைகளைப் புதுச்சுவை நிரம்பிய சிறு சிறு கதைகளினூடே கலந்து அவ்வழியாகப் போதகஞ்செய்தல் பாராட்டத் தக்கதாகும். பிரஜாநுகூலன் பத்திரிகையை நடத்திவரும் நம்முடைய கருத்தும் இதுவே.

2. "பிரஜாநுகூலன்" பத்திரிகை கதைகளுக்கும் நாவல்களுக்கும் மிகவும் பெயர்பெற்றது. கதைகளைப் படித்து அதன்மூலமாகப் புத்தக வாசிப்பிலே ஒருவித ருசி தோன்றி, அப்படியே பலவிதமான நூல்களையும் வாசிக்க விருப்பமுண்டாகி, உயரிய கிரந்தங்களிலும் பார்வை பிரவேசித்து பழக்கம் மிகுதியாகித் தேர்ச்சி எய்தினோர் வெகுபேர். ஆயிரம் பக்கங்களாக விருந்தபோதிலும் சலியாது படிக்க விருப்பம் விளைப்பது கதைகளும் நாவல்களுந்தான். பிரஜாநுகூலனில் பிரதிமாதமும் புதிய கதையொன்று காணலாம்.

3. "பிரஜாநுகூலன்" பத்திரிகை பிரபஞ்சத்தின் அநுபவ விநோதங்களை வெகு நன்றாய் எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோரும் புகழ்கின்றார்கள். சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் தமது உள்ளத்தில் மறைந்துநிற்கும் ரகசியங்களெல்லாம் இதிற் காணப்படுகின்றனவேயென்று வெகுவாக வியந்து நேசிக்கின்றனர். உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அனுபவ விஷயங்களைத் திரட்டிக் கதா ரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம் ஏனென்றால் அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும், அதனினும் மேம்பாடான படிப்பினையும் வேறேதுமில்லை. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே சாஸ்த்ரம், அநுபவமே சாக்ஷி, அநுபவமே உத்தம சிநேகிதனுயுமிருக்கிறது.

4. "பிரஜாநுகூலன்" பத்திரிகை உலக நன்மையைக் கருதி வெளியிடப்படுகிறது. அரிய பல நூலாராய்ச்சியாலும், அனுபவ உலகவியல்பாலும், அறிவுடையோர் தெரிவித்த கேள்வியளவாலும், கற்று, உணர்ந்து, அடைந்து கேட்ட பயனெல்லாம் இப்பத்திரிகையில் எல்லோரும் கற்று உணர்ந்து அடையலாம். எந்த சாதிக்கும் எந்த சமயத்திற்கும் எந்த நூலிற்கும் இதன் கருத்து ஒத்திருக்கும். பாலர்கட்கும் இது பயன்தரும். குமரர்கட்கு மிது நலங்கொடுக்கும். விருத்தர்கட்கு மிது மேலாம்பயனே. வெறுங்கதையன்று. வீண்வளர்ப்பன்று. காசு பறிப்பதற்கன்று, கௌரவங் கருதியன்று. அதன் பெருமை பார்த்தால் தெரியும், படித்தால் அறியலாம்.

5. "பிரஜாநுகூலன்" பத்திரிகை காகிதத்தாலும் எழுத்தாலும் வேலையழகாலும், விஷய அருமையாலும், நடையின் இனிமையாலும், நாகரீக மிகுதியாலும் உயர்ந்து விளங்குகிறது. ஆழ்ந்த கருத்தமைந்து இனியசொற்களால் எளிய நடையோடு எல்லோருக்கும் பயனளிக்குமாறு சந்தமினிய சுந்தரத் தமிழில் எழுதப்பட்டுத் தேனினுஞ் சுவைத்துப் பாலினும் வெளுத்துப் பொருளினும் மிகுத்து அலங்காரம்செய்து அறிவை விளக்கி ஆநந்தங் கொடுப்பதாயிருக்கின்றது,

6. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 14-வருஷங்களாக நடைபெற்று பெருந்தன்மை வாய்ந்து தமிழ்நாடெங்கணும் பரவியுள்ளதென்பதை யாவருமறிவார். இதைப் பூர்ணமாய்ப் படித்து, தாங்கள் உடனே இப்பத்திரிகைக்கு சந்தாதாரராகவேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

☞ மானேஜர், பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம், திருச்சி.